பதிவு எண் M. 4900 | 16 பக்கங்கள்.

குடி அரசு

நிறுவியது: 1924.

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0 தனிப்பிரதி 0-2-0
வெளிநாடு ,, ரூ. 9-8-0 ,, 0-2-6.

மலை 22 } ஈரோடு 30-7-1949 சனிக்கிழமை } மலர் 47.

வாழ்க்கைக்கு மதம் வேண்டுமோ?

★

மக்கள் வாழ்க்கை நாகரீகமாய் ...த்தப்பட மதம் வேண்டுமென் ...து மதக்காரர்களுடைய வாதமா...ம்.

இப்படிப்பட்ட வாதமும் தங் ...ள் தங்கள் மதம்தான் மனித ...மூக நாகரீக வாழ்க்கைக்கு ஏற் ...து என்பது ஒவ்வொரு மதக்காரர் ...ரின் பிடிவாதமுமாகும்.

மதமில்லாமல் உலகில் எவ்வ ...வோ ஜீவகோடிகளும், பல மக்க ...ம் வாழ்க்கை நடத்தவில்லையா ...ன்று கேட்போமேயானால், ...தற்குப்பதில் சாதாரண அபே ...ன வாழ்க்கை வாழலாமே ஒழிய ...கரீகமான வாழ்க்கை நடத்த ...டியாது என்றும், அதற்காகத் ...ன் மதமில்லாவிட்டால் மக்கள் ...கரீக வாழ்க்கை நடத்தமுடியா ...தென்று சொல்லப்படுவதாகவும் ...சால்லுவார்கள்.

அதற்காகவேண்டியே மதவாதி ...ள் மதத்தைப்பற்றி பிரசாரங்க ...ளும், விளம்பரங்களும் செய்து ...ருகிறார்கள். இப்படிப்பட்ட ...ளம்பரங்களும், பிரசாரங்களும் ...ராணங்களாலும், படங்களாலும், ...தைகளாலும், நடிப்புகளாலும், ...காவில்களாலும் மற்றும் பல சாத ...ங்களாலும் செய்து வருகிறார் ...ர்.

இவ்வளவோடு நிற்காமல், கடவு ...ற்ற, மதமற்ற உலகத்தில் மக்கள் ...் கொடுமைகளையும், தீமை ...களையும், ஹிம்சைகளையும் ...டைவது போலவும், அசுர ஆட் ...ய நடைபெறுவதாகவும் கட்டு ... கட்டி மக்களைப் பயமுறுத்து கிறார்கள்.

மேலும், கொள்ளை நோய்களும் துஷ்ட தேவதைகளின் கோபத்தின் பலன் என்றும், வால் நட்சத்திரத்தின் வாயிலிருந்து கக்கப்படும் தீப்பொறியின் விளைவென்றும் மக்களை ஒருவிதப் பயத்துக்குள்ளாக்குகிறார்கள்.

நம்நாட்டு அரசியல் மேதாவிகளும் இப்படித்தான். அதாவது, பூகம்பத்தால் விளையும் கேடுகளும், வெள்ளத்தாலும் நெருப்பாலும் ஏற்படும் கொடுமைகளும், கடவுள் கோபத்தால ஏற்பட்ட விளைவின் பயனென்றும் சொல்லி மக்களை மிரட்டுகிறார்கள்.

மனிதர்கள் நடந்துகொள்ள வேண்டிய ஒழுக்கச் சட்டம் என்பதெல்லாம் அந்தந்த சமூக நிலையை அனுசரித்து ஏற்படுத்தப்பட வேண்டியதேயல்லாமல், மனிதர்கள் மேல் உலகத்துக்குப் போவதற்குத் தகுந்தபடியும், அங்கு சென்றபின் நடக்கவேண்டிய காரியங்களுக்குத் தக்கபடியும் அமைக்கவேண்டியதேயில்லை.

மதமில்லாவிட்டால், மக்கள் கோவிலுக்குப் போகமாட்டார்களே என்றோ, மக்கள் கோவிலுக்குப் போகாவிட்டால்மக்கள் ஒழுக்கமாக நடந்து கொள்ளமாட்டார்களே என்றோ யாரும் பயப்பட வேண்டியதில்லை.

உதாரணம் வேண்டுமானால், கோவிலுக்குப் போவதை நிறுத்திவிட்டவர்களிடமிருந்தே அவர்களது விகிதாச்சாரத்துக்குக் குறைவில்லாத அளவு குற்றங்கள் குறைந்து கொண்டு வந்திருப்பதற்கு அநேக ஆதாரங்கள் புள்ளி விபரத்தோடு காட்டலாம்.

மதங்கள் ஒழிக்கப்படவேண்டும் என்று நாம் சொல்ல ஆரம்பித்தாலேயே ஏன் சொல்லுகின்றோம்? அதற்காக என்ன அவசியத்தைக் காட்டுகிறோம்? என்பதைச் சிந்திக்காமலேயே, சிந்திக்காவிட்டாலும் நமக்குக் காது கூட கொடுக்காமலேயே, ஏதோ ஒருபெரிய அபாயம் வந்துவிட்டது போல் மிகக்கவலையாக சிந்தனை செய்யத் தொடங்கிவிடுகிறார்கள்.

இதற்குக் காரணமெல்லாம் அவர்கள் ஒழுக்கம் கெட்டுவிடுமே என்பது கூட அல்லாமல் நரகம் சித்தித்துவிடுமே என்பதும், மேல் லோக வாழ்வு பெருத்த மோசமானதாகிவிடும் என்பதுமே யாகும்.

ஏனெனில், குருக்கள்மார் மதத்தை மக்களுக்குள் புகுத்துவதற்காகவும்; மக்கள் மனதில் என்றென்றும் மதம் நிலைத்திருப்பதற்காகவும் நரகத்தைப்பற்றி அவ்வளவு அதிகமாக வருணித்து அவ்வளவு அதிகமான பயத்துக்கு ஆளாக்கி வைத்திருக்கிறார்கள்.

பொதுவாகவே கடவுள் உதவி வேண்டுமானால் மதம் வேண்டும் என்பதும், மதம் வேண்டுமானால் குருக்கள் வேண்டுமென்பதுமே மதத்தின் அவசியத்துக்குக் காரணமாக்கி, அதன்மூலம் குருக்கள்மார் ஆதிக்கத்தை நிலைநிறுத்தியிருக்கிறார்கள்.

சாதாரணமாகப் பார்த்தாலும், மனித சுபாவமானதும், மனித சக்தியானதும் மதத்தைக்கொண்டே தான்வெளிப்படகூடியதென்றோ நிலைநிற்கக்கூடியதென்றோ சொல்வது சுத்தத் தப்பான அபிப்பிராயமாகும்.

கோவிலையும் மதத்தையும்மிகப் பிரமாதமாய் கருதாதவர்களும் அதில் கவலையில்லாதவர்களும் அவற்றில் அனுதாபமோ, நம்பிக்கையோ இல்லாதவர்களுமான மக்களுக்குள்ளாகவே எத்தனையோ பேர் தங்கள் தங்கள் சுபாவங்களையும், சக்திகளையும் உணர்ந்துக்கொண்டு எவ்வளவோ மேலான நல்ல தன்மையுடனும், அதிமேதாவித்தனமான அறிவுடனும் உடல் பொருள் ஆவி ஆகியவற்றை மக்கள் நல்வாழ்க்கைக்குப் பயன்படுத்தியவர்களாகவும் இருக்கிறார்கள்.

மதத்தினாலும், பக்தியினாலுந்தான் மக்கள் தங்கள் சக்தியை உணரலாமென்பதும், நன்மையான காரியங்களைச் செய்யலாமென்பதும், மேலான அறிவைப் பெறலாம் என்பதும் மெத்த பலமற்றவாதமேயாகும்.

ஒழுக்கத்துக்காகவும், சமுதாய ஒழுக்கத்துக்காகவும் மனிதனுக்கு மதம் வேண்டுமென்பது மிக மிக பலமற்ற வாதமாகும்.

வரப்போகின்ற காலத்தில் மதக் கோட்பாடுகளைப்பற்றிப்பிரமாதப் படுத்துவதும், அதற்காகப் பலகாரணங்களைக் கட்டுக்கட்டி மக்களுக்குள் புகுத்துவதும், அவற்றை எல்லாம் நம்பும்படி செய்வதும் இனி முடியாது என்று தைரியமாய்ச் சொல்லுவேன்.

எப்படித்தான் பாடுபட்டுப் புகுத்தினாலும், உண்மையான நம்பிக்கை ஏற்படுவதற்கு இடமில்லாமல்போனால் அவை எப்படி மதிப்புப் பெறமுடியும்? ஜனங்களைக் கோவிலுக்குப் போகும்படி செய்தல் ஒரு விஷயம். அவர்களை நரகத்திலோ, அல்லது மற்ற புராதன கொள்கைகளிலோ நம்பிக்கை கொள்ளச்செய்வது வேறு விஷயம்.

சிறிது யோசித்தாலும் நரகத்தின் அடிப்படை முழுவதும் பொய்யாகிவிடும். கோவிலுக்குப் போகாததாலேயே நாம் கெட்டுப்போய்விடமாட்டோம். நாம் கோவிலுக்குப் போவதுகுறைந்துபோயிருந்தாலும் நாம் நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்தே வருகிறோம். நான் வாசா கைங்கரியம் செய்வதாக யாரும் நினைக்கவேண்டாம். நான் ஒருவருக்கும் விரோதமாக வீண் வார்த்தைகளைச் சொல்லவில்லை. நமதுகாலத்தைப்பற்றி உரிய காலத்தில் சரித்திர சம்பந்தமாகவும் சமுதாய சம்பந்தமாகவும் ஆராய்ச்சி செய்வோமானால், ஏராளமான உண்மைகளும் புள்ளி விபரங்களுமே நாம் முன்னேற்றமடையவில்லையா என்ற சந்தேகங்களை அறவே ஒழித்துவிடும். தற்காலத்தைவிட முற்காலத்தில் குற்றங்களும், பலாத்காரங்களும், அக்கிரமங்களும் உலகத்தில் அதிகமாகவே இருந்தன. முற்காலத்தவர் நம்மைவிட அதிக சுகஜீவிகளாய் இருந்ததில்லை. அவைகளைப் பற்றி நாம் நிச்சயமான புள்ளி விபரங்களைக் காட்டலாம்.

மதக்காரர்கள் நாம் மடுவில் மூழ்கி இறக்கிறோம் என்று கருதுகிறார்கள். அதாவது நாம் அநீதியை வளர்க்கிறோம்என்பதாகும். இதற்கு ஆதாரமான புள்ளி விபரங்கள் ஒன்றுமில்லை. ஆகவே இந்த அபிபபிராயம் அர்த்தமற்றது. பத்திரிகைகளில் தோன்றும் விபசார விஷயங்களையும் குற்ற விபரங்களையும் பார்த்து அத்தகைய அபிப்பிராயம் கொள்ளுகிறார்கள். ஆதிகாலத்தில் இத்தகைய பத்திரிகை விளம்பர முறைகள் இருந்ததில்லை யென்பதை மக்கள் மறந்துவிடுகிறார்கள். ஆயினும் அக்காலத்திலும் விபசாரங்களும் குற்றங்களும் இருந்தே வந்திருக்கின்றன. ஆதி ப்யூரிட்டன்ஸ் என்பவர்களிடம் விபசாரம் மிகுந்திருந்ததாக ருசுப்படுத்தும் சரித்திரம் சாட்சியங்களைப்பற்றி தோழர் ரூப்பர்ட் ஹக்ஸ் "ஹால்டிமன் ஜீலியஸ் மாதப் பத்திரிகை" யில் எழுதியிருக்கிறார். பக்குல் என்னும் பேர்போன சரித்திர ஆசிரியர் ஸ்காத்லந்து ப்யூரிட்டன்ஸ் என்பவர்களிடம் பயங்கரமான துர்கிருத்தியங்கள் இருந்தனவென்று எழுதியிருக்கிறார். அப்படியே மத்திய காலங்களிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இருந்துவந்திருக்கின்றது. இவ்விஷயங்களிலும் நாம் நமது முன்னோர்களைவிட அதிகமாகக் கெட்டுப்போகவில்லை.

இனி ஒழுக்க முறைகளின் பலன்களைப்பற்றிப் பேசுவோம். இது மகா முக்கியமான விஷயம். இதனால் உலகம் பாதிக்கப்படவில்லையென இலேசாய்க் கருதப்படுகிறது.

பென் லிண்டுஸி என்னும் நீதிபதி "நவீன வாலிபர்களின் புரட்சி" என்னும் நூல் எழுதியிருக்கிறார். அவர் அமெரிக்க வாலிபர்களின் எண்ணங்கள், நடத்தைகள் முதலியவைகளைப்பற்றி மிக நன்றாய் அறிந்தவர். அவரைப்போல இளைஞர்களை அறிந்தவர் வேறு யாரும் கிடையாது. அவர் வாலிபர்களுக்குள் காதல் சுதந்தரம் வெகு அதிகமாக இருக்கிறதென்று தமது நூலில் விளக்குகிறார். அது வழக்கத்திற்கு அதிகமாக இருக்கிறதா வென்பது அவருக்குத் தெரியாது. அவ்விஷயத்தில் புகுந்து சரியான ஆராய்ச்சி செய்தாலொழிய யாருக்கும் உண்மை விளங்காது.

கிழவர்களின் அபிப்பிராயங்கள் உபயோகமற்றவை. இங்கிலாந்திலே கிழவர்கள் வாலிபர்களாய் இருந்தபோது பருவகாலம் வித்தியாசமுள்ளதாய் இருந்ததென்று சாதாரணமாய் நம்புகிறார்கள். ஆனால் உண்மையில் அப்படியில்லையென்பதை ருசுப்படுத்த சாட்சியங்கள் இருக்கின்றன. நீதிபதி லிண்டுஸி அறிந்து சொல்வது என்னவென்றால், கோவிலுக்குப்போய் உபதேசங்கள் கேட்கும் வாலிபர்களுக்குள்ளும் இளம் பெண்களுக்குள்ளும்தான் காதல் சுதந்தரம் ஏற்பட்டிருக்கிறது என்பதுதான்!

நவீன உலகம் தனக்கென்று சொந்தமாகச் சட்டங்கள் செய்துகொள்ளவேண்டும், குற்றத்தைப் பற்றியும் பலவந்தத்தைப்பற்றியும் பயப்படவேண்டாம். ஜனங்கள் தங்களைக்காப்பாற்றிக்கொள்ளும் மணவாழ்க்கை விஷயமாக ஜன சமூகம் தம் சமுதாய நன்மைகளைப் பாதுகாத்துக்கொள்ளும். சமுதாயத்தைப் பாதித்து யாருக்கும் தீங்கு செய்யாத தனிப்பட்ட

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

ஆண் பெண் கூட்டு வாழ்க்கை!

★

கல்யாணமென்பது ஆணும் பெண்ணும் கூடி வாழும் வாழ்க்கைக்கு இட்ட பெயர். இதுதான் கல்யாணமென்பதின் இயற்கையான கருத்து. இந்த வாழ்க்கை மனிதனுக்கு மாத்திரம் பொருந்தியதல்ல. அனேக ஜீவராசிகளுக்கும் இந்த வாழ்க்கை பொருந்தியுள்ளது. ஆனால் பலவித சமூக காரணங்களால் சகல உயிர்களுக்குமுள்ள இந்த பொது வாழ்க்கையை மனிதர், விபரீதமாக எண்ணி நடத்த ஆரம்பித்தனர். இந்த விபரீத பழக்க சித்தாந்தங்களில் முக்கியமாக மதத்தால் உண்டானவை. கல்யாணமென்ற இயற்கை வாழ்க்கையை பற்றி விசாரித்தறிவோம்.

ஆதிகாலக் கல்யாணம்

ஆணும், பெண்ணும் கூடி பல காலமோ, அல்லது சிலகாலமோ, வாழும் நடவடிக்கை(Behaviour) பல உயிர்களிடத்தும் காணலாம். முக்கியமாக உயர்தர உயிர்களிடம், இவ்வாழ்க்கையை சாதாரணமாகக் காணலாம். தாழ்ந்த உயிர்களாகிய மீன், தவளை, ஊர்வனங்களில், ஆணும் பெண்ணும், பருவகாலத்தில் மாத்திரம் கூடி, பிறகு ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமலே பிரிந்துவிடுகின்றன. இந்த சொற்பகால வாழ்க்கைக்குக் காரணமென்னவெனில் தாழ்ந்த உயிர்களின் குஞ்சுகள், அது மீன் குஞ்சாயினும், தவளைக் குஞ்சாயினும் அல்லது ஓணான், பல்லிகளின் குஞ்சாயினும் பிறந்தவுடனே தனித்து ஜீவிக்கும் தன்மையைப் பெற்றுவிடுகின்றன. முட்டையிலிருந்து பொரித்த குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிப்பட்டதும் தானே நீந்தவும், நடக்கவும், ஓடவும் சக்தி பெறுகின்றன. இந்த காரணத்தினிமித்தம் இந்தக் குஞ்சுகளின் தாய்தந்தையர்களுக்கு குஞ்சுகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற அவசியம் இல்லாமல் போகின்றது. சம்போகத்திற்கு மாத்திரம் கூடி அது முடிந்தவுடன் தாயும், தந்தையும் பிரிந்துவிடுகின்றன. ஆதி உயிர்களாகிய மீன், தவளை ஊர்வனங்களுக்கு சையோக காலமே அவைகளின் கல்யாண காலமாகும். இதுவே உயிர்களுக்குள் ஆரம்பித்த ஆதிகால கல்யாணமாகும். கல்யாணத்திற்கு சம்போகமே அஸ்திவாரம். இந்தச்சிறிய அஸ்திவாரத்திலிருந்து வளர்ந்தன பலவித கலியாண வாழ்க்கை என அறிக. இதிலிருந்துதான் மனிதருக்குள் வழங்கிவரும் கல்யாணமும். இந்த உயிர்களிலும் தாழ்ந்த உயிர்களிலும், இந்த பூர்வ சம்போக கல்யாணத்தைப் பார்க்கலாம். ஆனால் அது மிகவும் சொற்பகால வாழ்வாகையால் அதனைக் கவனித்தல் அனாவசியம்.

வாழ்க்கைக் காலம்

அந்த சொற்பகால சம்பந்தத்தை கல்யாணமென்று வழங்குவதுமில்லை. இருந்தாலும் அந்த சொற்பகால வாழ்விலிருந்தே வெகுகால ஆண் பெண் சம்பந்த வாழ்க்கையும் பெறப்பட்டபடியால், அதனையும், The most primordial marriage புராதீன கல்யாணமெல்லாம் உயிர்கள் சம்பந்தமாகபேசவேண்டின் biologically Speaking இழந்த சம்போகமே மேல்தர சம்போக வாழ்க்கைக்கு ஆதாரம். கிழ்த்தர சம்போகத்தை Mere Sexual intercourse, வெறம் ஆண் பெண் சம்போகமென்கின்றோம். மேல்தர சம்போகத்தை Marriage கல்யாணமென்கின்றோம். இழந்த உயிர்களின் சம்போகத்தில், ஆணும் பெண்ணும் கூடியவுடன் பிரிந்து போகின்றன. மேல் உயிர்களின் சம்போகத்தில் ஆணும் பெண்ணும் சம்போகம் செய்த பிறகும் சிலகாலம் கூடி வாழ்கின்றன, கூட்டுறவு கால வித்தியாசமேயொழிய சம்போகத்திற்கும், கல்யாணத்திற்கும் in essence, சத்தில் யாதொரு வித்தியாசமுமில்லை. இரண்டு கிருமிகள் அதே க்ஷணத்தில் கூடி சையோகித்து பிரிதலும், கல்யாணமே. மக்களில் ஆணும் பெண்ணும் கூடி சையோகித்த பிறகும் வாழ்வதும் கல்யாணமே. வெறும் சம்போகத்திற்கும், கல்யாணத்திற்கும் உள்ள வித்தியாசம் வாழ்க்கையின் கால வித்தியாசத்தால்தான் ஏற்பட்டுள்ளது.

தேவையையோட்டி

உயிர்கள் உயர உயர, அவ்வுயிர்களில் ஆணும் பெண்ணும் சம்போகம் முடிந்தபிறகும் சிலகாலம்கூடி வாழவேண்டி நேரிட்டது. அது எதற்கெனில், சம்போகத்தின் முக்கிய பயனாகிய சிசுக்களைக் காப்பாற்ற வேண்டியதாயிற்று. ஏனெனில் உயர்தர உயிர்களுக்குவுண்டாகும் சிசுக்கள், பிறந்தவுடன் சீவிக்க எழாமல், சிலகாலம் அவைகளை ஈன்ற ஆண்பெண் சவரட்சணையில் இருந்து தீரவேண்டி வந்தது. இத்தியாதி காரணங்களால் உயர்தர உயிர்களில் ஆணும் பெண்ணும் கூடியவுடன் பிரிந்து போகாமல், சிசுக்கள் வயது வரும் வரை கூடி வாழவேண்டி வந்தது. திருஷ்டாந்தமாக பட்சிகள் சையோகித்த பிறகும் முட்டையை அடைகாக்கவும், அதற்கு வேண்டிய கூண்டுகளைக்கட்டவும், குஞ்சு பொறிக்கும் வரை, ஆணும் பெண்ணும் கூடி வாழவேண்டியதாயிற்று. பட்சிகளுக்கும் உயர்ந்த உயிர்கள், அதாவது பால்கொடுக்கும் ஜீவவகைகள் (Mammals) தங்கள் சிசுக்களைக் காப்பாற்றவேண்டி வெகுகாலம் கூடி வாழவேண்டியிருக்கிறது. இந்தத் தாய் தந்தையருடைய கூட்டுறவு தங்கள் குஞ்சுகளுக்கும், சிசுக்களுக்கும் கிடைக்காமல் போனால் அந்தக் குஞ்சுகளும், சிசுக்களும் நாசமாய் விடும். அப்படித் தங்கள் பூண்டே அற்றுப்போகாமலிருக்க ஆணும், பெண்ணும் தங்கள் சிசுக்களைக் காப்பாற்ற சிலகாலம் கூடி வாழவேண்டிய அவசியம் நேரிட்டது. மனிதரிடத்தும் இதே காரணத்தால் தங்கள் வாழ்க்கையும் மற்ற உயிர்கள் வாழ்க்கையைவிட நீளவேண்டியதாயிற்று.

மனிதனுக்கு நெருங்கிய பங்காளியாகிய சில உயர்தர ஜீவர்கள்

ரோஜா முத்தையா

சம்போக காலத்திற்குப் பிறகும் வெகுகாலம் கூடி வாழ்கின்றன. ஏனெனில் மற்ற உயிர்களின் சிசுக்களைவிட வாலில்லாக் குரங்குகளின் சிசுக்கள் பலமற்றுப் பிறக்கின்றன. அதனைக் காப்பாற்றாவிடில் வாலில்லாக்குரங்கு வகையே பூண்டற்று விடும் இந்த அபாயம் நேரிடாவண்ணம் குரங்கின் குழந்தைகள் தாங்களே பிழைக்க ஆரம்பிக்கும்வரை தங்கள் தாய் தகப்பன்மார்கள் அவைகளைக் காப்பாற்றக் கூடி வாழ்கின்றன.

இந்த வாலில்லா மனிதக்குரங்குகளில் (Man-Apes) ஆணும் பெண்ணும் குழந்தைகளுடன கூடி வாழும் பழக்கம் மிகுதியாம். இவைகள் வெகுகாலமாகத்தங்கள் சிறு குழந்தைகளுடன் உண்டு உறங்குகின்றன. பெண்ணையும், குழந்தையையும் மரத்தின் மேல் வைத்து ஆண் இரவில் காவல் காக்கின்றன. சிறு குழந்தைகளுக்கு அபாயம் வரவொட்டாமல் காக்கின்றன. பல வருஷங்கள் வரை குழந்தைகள் வளர்ந்து தனித்து சமுசாரத்தைத் தேடிக்கொள்ளும்வரை ஆணும், பெண்ணும் குழந்தைகளுடன் வாழ்கின்றன. கொரில்லா (Gorilla) என்ற ஓர் ஆண் மனிதக் குரங்கு சாதாரணமாக ஒரே 'மனைவியுடன்' தான் வாழ்கின்றதாம். இந்த உயர்தர வாழ்க்கையைக் கேட்டாகிலும் நமது மக்களுக்குப் புத்தி வராதா?

பூர்வகால மனிதக் குரங்கு வாயிலாகப் பெறப்பட்ட நாமும், சம்போக காலத்திற்குப் பிறகும் ஆணும் பெண்ணுமாக வெகு காலமாக சமுசாரத்தை நடத்திக் கொண்டு வருகிறோம்.

கல்யாணத்தின் உற்பவம்

ஏனெனில் உலகிலுள்ள மற்ற உயிர்களின் குழந்தைகளைவிட மனிதராசியின் குழந்தை (Is the most helpless) மிகவும் சக்தி அற்றதாகவே பிறக்கிறது. அதற்குச் சக்தி வந்து தானே சம்பாதிக்கும் வரை தாய் தகப்பன் சவரட்சணையில் இருந்துதான் தீரவேண்டியது. அப்படிக்கில்லாவிடில்மனிதப் பூண்டே அழிந்துவிடும். இந்த அபாயத்தைப் போக்குவதற்குத்தான் தாயும் தந்தையும் இணைபிரியாமல் கூடி வாழ நேரிடுகிறது. இந்த வாழ்க்கையைத்தான் கலியாணமென்பது.

ஆதலின் கல்யாணமென்பது என்னவெனில், ஆணும் பெண்ணும் கூடி தங்கள் குழந்தைகளைப்பாதுகாப்பதற்கு ஏற்பட்ட ஓர் பழக்கமாகும். இந்தப் பழக்கத்திற்கு ஆதிமூலம், சம்போகம். சம்போகத்தின் பயனை காத்து வளர்க்கும் வாழ்க்கைக் கல்யாணமாகும். இதுதான் கல்யாணத்தின் உற்பவம். இதனைச் சட்டதிட்டங்களாலும் பழக்க வழக்கங்களாலும், விதிவிலக்குகளாலும் காப்பாற்றப்பட்டு வருகின்றது.

கூட்டுறவு பாழானதேன்?

மனித நலம் அழிவுறாமல் காப்பாற்றவந்த பழக்கத்தை மதங்களும், கொடூரப்பழக்கங்களும் சேர்ந்து நொண்டி கொடூர சட்டதிட்டங்களை ஏற்படுத்தி கல்யாணமென்ற சாதாரணக் கூட்டுறவைப் பாழாக்கி ஆணையும், பெண்ணையும் இம்சித்து பிரம்மச்சாரித்தனமென்றும் விதவை என்றும், அமங்கலி என்றும் தூமகேதுக்களுக்கு சமானமென்றும், அழுக்கடைந்த சதை என்றும், விபசாரி என்றும், வேசி என்றும் மனித மக்கள் கேவலப்படுத்தப்பட்டுள்ளார். ஒரு மதத்தில் பெண்மக்களுக்கு மோட்சமென்பதே கிடையாதாம். இன்னோர் மதத்தில்,

"தூமகேது புவிக்கெனத்
தோன்றிய
வாம-மேகலை மங்கையரால்
வரும்"
"நாமமில்லையேல் கடுங்
கேடும்"
"நாமமுமில்லை, நரகமு
மில்லையே"

எனவும் பெண்மக்களை இகழ்ந்துள்ளார்!! இன்னொரு மதத்தின் படி மக்களை மோசம் செய்யவந்த பேய்களாம் நமது தாய் தமக்கையர்!! இக்கொடிய பாடல்களையும், பாதகப் பழக்கங்களையும் பெண்களுக்கு அகோர தண்டனையையும் விதித்த ஆண்மகன் தனக்குத் தாயில்லாமலிருந்தால் உலகில் இவன் தோன்றி இருப்பானா என்று சிந்தித்துப் பார்ப்பானாக!!! தனது தாயையும், தமக்கையையும் பழிக்கவந்த பாதகனுக்கு மதங்களும் அனுகூலமாக இருந்து வருவதாகத் தெரிகிறது!! மதங்கள் ஒழிந்தால் மாத்திரந்தான் ஆணுக்கும், பெண்ணுக்கும் சரிசமத்துவம் ஏற்படும்.

குரங்கு மனிதர் வாழ்க்கை.

ஆதிமனிதக்குரங்கின் சாதாரண வாழ்க்கையிலிருந்து குரங்கு மனிதர் பெறப்பட்டிருக்க வேண்டும். ஆனால் குரங்குமனிதர் நமது காலங்களில் உலகில் எங்கு மில்லை. சென்ற சில வருஷங்களுக்குமுந்தி பிரதான பட்டணமாகிய பிக்கின் அருகில், பத்துலட்ச வருஷங்களுக்கு முந்தி வாழ்ந்திருந்த சில குரங்கு மனிதருடைய எலும்புகள் பல அகப்பட்டன. அவ்வெலும்புகளை உடைத்தால் இருந்த உருவங்களுக்கு ஸினன்திரோபஸ் (Sinunthropus) என்று பெயரிட்டிருக்கிறார்கள். அதாவது சீன தேசத்து ஆதி மனிதர்கள், ஆங்கு கண்டெடுக்கப்பட்ட எலும்புகளில் பெண்ணின் எலும்பும் கலந்திருப்பதைக் கண்டு அந்தக்காலத்தில் அக்கால குரங்கு மனிதர், ஆணும், பெண்ணும் கூடிய சமுசாரங்களை நடத்திவந்திருப்பதாக யூகிக்கலாம். அந்தப் பூர்வகால சமுசார வாழ்க்கையிலிருந்து நமது குடும்ப வாழ்க்கையும் (Our Family dips) பெறப்பட்டிருக்கவேண்டும். இந்த சாதாரண ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய வாழ்க்கையில், கால தேச வர்த்தமான மாறுதல்களால் சில நன்மையான பழக்கங்களும் புடைசூழ்ந்துவந்தன.

ஆணும் பெண்ணும் கூடிவாழு புராதன வாழ்க்கையைக் கலியாண மென்று மக்கள் பேச ஆரம்பித் பிறகு, வழங்கத் தலைப்பட்டன உயிகளுக்கு இதுவோர் அத்திய வசியமான நடத்தையாகும். இ தப் பூர்வீக நடத்தையை மனி சமூகம் அதிகரித்து வரவும், பற்ப கட்டுத் திட்டங்களால் அதன் மு கிய கருத்து வற்புறுத்தப்பட்ட அதன் முக்கிய கருத்து பிரஜா விருத்தி அதாவது சந்தான அ விருத்தி என்றும், மக்களை ஈ றெடுத்து, காப்பாற்றுதலென்று அந்தக் கருத்து தடைப்பட்டா மனித குலமே, க்ஷீணித்துவிடுமெ றும், முன் பகுதியில் எடு துரைத்தோம். ஆனால் சம்போ மெனில், சந்தானவிருத்தி அ யும் மார்க்கமெனவும் காண் தோம்.

(தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்

நடப்பும்—நாட்டமும்

ஈட்டி

என்ன ஆச்சரியம்?

உலகில் எத்தனையோ சம்பவங்கள் நடக்கின்றன. அவைகளில் சில நிகழ்ச்சிதான் 'ஆச்சரியத்துக்குரியது,'' "மிக மிக ஆச்சரியத்திற்குரியது'' என்று மக்களால் பேசப்படுகின்றன. இந்த "ஆச்சரியம்'' "மிக மிக ஆச்சரியம்'' என்பதெல்லாம், அந்த நிகழ்ச்சிகளைப்பற்றிய அறியாமை எந்த அளவுக்கு இருந்ததோ, அந்த அளவான ஆச்சரிய உணர்ச்சிதான், அந்த நிகழ்ச்சிகளைப்பற்றிய உண்மையையறியும்போது ஏற்படுகிறது என்பது உலகத்தோரின் ஏகோபித்தமுடிவு.

"நாலு கை இரண்டு காலோடு பிறக்கும் மனிதக் குழந்தை!'' என்கிற ரீதியில், இயற்கையின் பொது விதிக்கு மாறாகப் பிறக்கும் பிறவிகள் ஆச்சரியத்திற்குரியதுதான் என்றால், அது எந்த அளவுக்கு ஆச்சரியம் என்பது, விஞ்ஞானம் விடைகாணும் காலம் வரையில்தான் என்பதை உலகம் தெரிந்துகொண்டுவிட்டது. "காற்றோட்டமில்லாமல் பூமிக்குள் ஏழு நாள் இருந்து, பின் உயிருக்கோ உடலுக்கோ கேடில்லாமல் யோகீஸ்வரர் வெளிப்பட்டார்'' என்கிற ரீதியில் வெளிவரும் செய்திகளும் இப்படித்தான். அறியாமையின் உச்சம் எவ்வளவோ, அந்தஉச்சத்தின் அளவு ஆச்சரியமும், பின் அறியாமை விலக்கப்பட்ட நேரத்தில் ஆச்சரியத்திற்கு இடமில்லாமையையும் மக்கள் கண்டுவருகிறார்கள்.

ஒருவரைக் குறித்துத் தப்பான செய்தியைக் கட்டி அதை மக்களிடையே பரப்பச் சிலர் முயற்சிப்பதும், அந்த முயற்சி வெற்றி பெற்று, அந்தத் தப்பான கருத்து மக்கள் நெஞ்சத்தில் இடம்பெற்ற பிறகு, அந்தச் செய்தியைப்பற்றிய உண்மை காலப்போக்கில் வெளியாக, அந்த உண்மையையறியும் போதும் மக்களிடையே ஆச்சரிய உணர்ச்சிதான் வெளியாகிறது. ஆனால், ஏன் இதைப்பற்றி இவ்வளவு காலமும் நாம் சிந்திக்கவில்லை, இது இப்படியும் இருக்கலல்லவா என்கிற எண்ணமே நமக்கு உண்டாகவில்லையே என்பதைப் பலர் எண்ணிப்பார்ப்பது கூட இல்லை. இந்த ரகத்தைச் சேர்ந்ததுதான் தோழர்

சுபாஷ் சந்திரபோஸ்

விஷயமும் என்று மீண்டும் பலமாக அடிபடுகிறது ஒரு செய்தி. போஸ் இப்பொழுது கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தில் உள்ள சைனாவில் இருக்கிறாராம். சகோதரர் சரத்சந்திரரோடு அவர் சமீபத்தில் ஸ்விட்சர்லாந்தில் தங்கியிருந்தபோது தொடர்பு இருந்ததாம். இந்தியாவில் நுழைவதற்கு அவர் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்கிவிட்டால் அவர் இந்தியாவுக்கே வந்துவிடுவாராம். இப்படியாக ஒரு அறிக்கையை பார்வர்ட் பிளாக் கட்சியின் பொதுக் காரியதரிசி எல்லாக் கிளைக் கழகங்களுக்கும் அனுப்பியிருக்கிறார்.

தோழர் சுபாஷ்போஸ் விமான விபத்தில் இறந்தொழிந்தார் என்பது அரசியல் ஆதிக்கக்காரர்களின் தந்திரமான கட்டுக்கதை என்பதுதான் இந்த அறிக்கைக்கு ஒரு அர்த்தம். வெள்ளை ஏகாதிபத்தியத்தின் ஏஜண்டுகள் அல்லது கூட்டு ஒப்பந்தக்காரர்கள்தான் இன்றைய சுயராஜ்ஜிய பீடத்தை அலங்கரிப்பவர்கள். இது உண்மையாயில்லாவிட்டால் சுதந்தர வீரர் சுபாஷின் மீதுள்ள தடையை நீக்குவதற்குமுன் வரட்டுமே என்கிற சவாலும் இந்த அறிக்கையில் அடங்கியிருக்கிறதென்றுதான் சொல்ல வேண்டும்.

சுயராஜ்ஜிய சர்க்கார், இதுவிஷயத்தில் தடையை நீக்கி, சுயராஜ்ஜியத்தின் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளப் போகிறார்களா? அல்லது இதென்னடா புதச்சனியன், சந்தி சிரிக்கிறது பத்தாமல், செத்தொழிந்ததெல்லாம் புத்துயிர் பெற்று, நம்மை சர்வ நாசப்படுத்தவும் இது ஆரம்பமோ என்று கலங்குகிறார்களோ? தெரியவில்லை. ஆனால் சுபாஷ் உயிருடன் இருப்பாரானால்-இந்த நாட்டிற்கு மீண்டும் அவர் திரும்பி வருவாரானால், அது ஒன்றும் ஆச்சரியமில்லை.

யார் யாரோ

என்னென்னமோ நிலையை அடைகிறார்கள் இன்றைக்குச் சோத்துக்குத் தாளம்போடும்நிலையிலுள்ள பலர் நேற்று, முந்தாம் நாள் எவ்வளவோ சீரும் சிறப்புமாக வாழ்ந்தவர்கள், எத்தனையோ பேர்கள் இவர்கள் கையை எதிர்பார்த்து வாழ்ந்தார்கள், இன்று அவர்களின் நிலையெல்லாம் இந்தப்படியாகிவிட்டது என்று பேசுகிறோம். அன்றைக்குப் பிச்சை எடுக்காத குறையாய் அரைப்பட்டினியும் முழுப்பட்டினியுமாய்க்கிடந்து,மானாபிமானத்தைப்பற்றிக் கவலைப்படாது, எந்தக் காரியத்தையும் செய்யத் துணிந்து, செய்துவந்த இந்தச் சோற்றுத் துருத்திகள்தான், இன்றைக்கு என்னடாவென்றால், உப்பரிகை வாசிகளாய், உல்லாச புரியினராய் வாழ்கின்றார்கள். அது மாத்திரமல்ல ஒழுக்கத்தை நிலைநாட்ட, உபதேசம புரியும் உத்தமோத்தமர்களாகவும் காட்சி தருகிறார்கள் என்றும் பேசுகிறோம்.

இந்த மாதிரியான நடப்புக்கெல்லாம் காரணம் "அடிநாளிலேயே ஆண்டவன் அப்படி எழுதி வைத்திருக்கின்றான்'' என்று சுலபமாகச், சிந்தனைக்கு 'மதச் சிறை' கட்டியவர்கள் வலியுறுத்திச் சொல்லி வந்தாலும், இதில் சோம்பேறித் தனம் மட்டுமல்ல, மடத்தனமும் வழிந்தொழுகுகிறது என்றே இன்று பலர்கூறக்கேட்கிறோம். "ஏதோ சந்தர்ப்பம் கிடைத்தது, எப்படி எப்படியோ காரியங்களைச்செய்து அதாவது என்னென்னமோ வேஷங்களைப் போட்டு, ஏமாற்று நாடகத்தில் வெற்றி பெற்றதாலேயே இந்த உயர்நிலை கிடைத்தது; தந்திரமோ யுக்தியோ கிடையாது, வெளுத்ததெல்லாம் பால் என்று நினைத்து ஏமாந்து போகும் பேர்வழிகள், இந்தப் பேர்வழிகளுக்கு அதற்கேற்றபடி சந்தர்ப்பம் வந்தது, எல்லாமிருந்துதான் என்ன பயன்? இன்றைக்கு ஒன்றுமில்லாமமே ஒழிந்து விட்டுக் குந்தியிருக்கிறார்கள்'' என்றும் விளக்கவுரை பேசிடவும் கேட்கிறோம்.

வளமான வாழ்க்கையும், வறண்

டுபோன வாழ்க்கையும் 'வையகத்தோன்' வகுத்துவிட்ட சாஸ்வதமான நிலையில்லை. மனிதனின் சாமர்த்தியமும், அதற்கு ஏற்ப அவனுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பாசந்தர்ப்பங்களுமே காரணம் என்பதை இனி உலகம் எந்தக்காலத்திலும் மறந்துவிடமாட்டாது.

இந்தமாதிரிதான்.

அரசியல் ஆதிக்கவாதிகளின் அழிவுக்கும், ஆட்சிக்கும்காரணம். சமுதாயத்தைச் சுரண்டிச் சுரண்டி ரத்தத்தை உறிஞ்சி உப்பும் சதிகாரப் பணமூட்டைகள், தங்கள் சதிச் செயலை மறைப்பதற்கு அவர்களுக்கு தர்ம காரியங்கள் எப்படிப் பகட்டான போர்வையாக இருக்கிறதோ, அப்படித்தான் பித்தலாட்ட அரசியல்சூழ்ச்சியாளர்களுக்கும்பிரச்சாரம் பெரும்போர்வையாக இருந்து வருகிறது. 20ம் நூற்றாண்டில்—அரசியல் உலகில் புளுகு மூட்டைக்கு அதிபதி, நம் நாட்டுப் புராணகர்த்தாக்களின் நேர் வாரிசு, ஜெர்மனியிலிருந்த 'கோயபெல்ஸ்' என்பது வெள்ளைக்காரன் நமக்குச் சொல்லித்தந்தது. ஆனால் அந்தக் கோயபெல்ஸ் எந்த மூலை? என்றுதான் இன்று நம் சுயராஜ்ஜியபுரியின் "சுகுமாரர்கள்" நடத்தையைக் கவனிக்கும்போது கேட்க வேண்டியதாயிருக்கிறது.

உணவு நெருக்கடி

பற்றிப் பேசுவது—அதற்காக எப்படியோ ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டுவிடுவது இன்றைக்கு ஊராள்வோரின் ஒரு 'பேஷன்' என்று மதிக்கப்படுகிறது. சில காலத்திற்கு முன்பு "படித்தவர்கள் எல்லாம் பட்டி தொட்டிகளுக்குப் போங்கள்" என்பது, எப்படி ஒரு தாரக மந்திரமாக இருந்ததோ, அதைப்போலவே உணவு நெருக்கடி ஒப்பாரிக்கீதமிசைப்பது இக்காலத்தில் தாரக மந்திரமாகக் கருதப்படுகிறது. அதனால்தான் இந்துஸ்தானத்தின் "மூலஸ்தானர்" ஆச்சாரியார் அவர்கள், உணவு நெருக்கடிதீர வழிகாட்டியிருக்கும் முறையும், 'உற்சவமூர்த்தி'யான நேரு சாஸ்திரியார் (பண்டிதர்) அவர்கள் கையாண்டிருக்கும்முறையும் இப்போது மிகமிகப் பிரமாதமாகப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்படுகிறது.

"ஆச்சாரிய சுவாமிகள்

உணவு நெருக்கடியை ஒழிப்பதற்காக, ஒரு காலத்தில் பஞ்சமன் வேஷம் பூண்டார். "கிருஷியத் தொழில் கிராதகர் கருமம்" என்பதாக எம்பெருமான் திருவாக்கு இருந்தாலும்கூட, ஜீவர்கள் அன்னமின்றி அரும்பாடுபடுவதைக்கண்டு, ஆத்திரப்பட்ட அவர், உலகத்திற்காக தாமே சண்டாளன் ஆகிவிடுவது என்பதாகத் திருவுளம்பற்றினார். இப்படித் திருவுளம்பற்றிய ஆச்சாரிய சுவாமிகள் பாதக்குறடுகள் கலீர் கலீர் என்று சப்திக்க, பஞ்சகச்சமணிந்து, பூரண மேனியையும் ஜிப்பாவால் மறைத்துக் கொண்டு, கருப்புக்கண்ணாடி சன்னதராய்ப்புறப்படலானார். எத்தனையோ பக்தகோடிகள் ஆச்சாரிய சுவாமிகளின் லீலா விநோதங்களில் கட்டுண்டவர்களாய்ப் பின்பற்றி வந்தவர்கள் மெய் மறந்து நிற்க, அய்யறிவுப் பிராணிகளாயிருந்தும் ஆச்சாரியார் அவர்களின் திருக்கடாட்சத்திற்கு ஆளான காரணத்தால், பூர்வக்ஞானமுணர்ந்து, ஏரிழுக்கவேண்டிய எருதுகள் இரண்டும் பக்திக்கடலில் குதித்தெழுந்து ஐய்ம்புலனுமடங்கி, எடுத்தடி வைத்த கால் எடுத்தபடி நிற்க, புஷ்பத்தைப் பழிக்கும் மெருதுவான கரங்கள் இரண்டில், வலக்கரத்தால் கயிற்றைப்பற்றி இடக்கரத்தால் ஏரின் தலையைக் கிரகணித்தார். அந்தக் கிரகணத்தினுடைய அமுக்கத்தால், அன்னாகசுதன் அலறித் துடித்து வீழ, அனைத்துயிரும் சந்தோஷக்கடலில் நீந்தத், தேவர்கள் பூமாரி சொரிய, உணவு நெருக்கடி என்கிற குறையானது உலகைவிட்டே ஒழிந்தது"

என்றெல்லாம் "நவீன ஆச்சாரியார் புராணத்தை" எழுதவேண்டும் என்றெண்ணியோ, என்னவோ, சீனிவாசய்யங்கார், சிவராம அய்யர் போன்ற நவீனப்புராணிகர்கள் "கவர்னர் ஜெனரல் கலப்பைபிடிப்பதைப்" படம் போட்டுக்காட்டியிருக்கிறார்கள்.

இந்தக் காட்சி

எவ்வளவு முன்னேற்பாட்டோடு, சினிமாப்படம் பிடிப்பவர்கள் காட்டும் அக்கரையோடு போட்டிபோட்டு, படமாக எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அந்தப்படத்தைப் பார்க்கும் ஒவ்வொரு நபரும் தெரிந்து கொள்ள முடியும். ஆச்சாரியார் முன்னொரு காலத்தில் சென்னைப் பிரதமராயிருந்த போது, விடியற்காலை 4 மணிக்கே எழுந்து, எப்படித் தன் காலைக் கடன்களை முடித்துக்கொள்கிறார் என்பதை "முட்டாள் ஜனங் களுக்கு" உணர்த்துவதற்காக, காலைக் கடன்களில் ஒரு பகுதியாகிய "வண்ணானவதாரத்தை"ப் படமாகப் போட்டுக்காட்டினார், அதுவும் அந்த நேரத்திலேயே போட்டோக்காரர்களால் தத்ரூபமாகப் படம் பிடிக்கப்பட்டது என்று தைரியமாகப் பச்சைப் புளுகு புளுகினார். அந்தப் புளு கைப்பரப்பிய புராணிகர்கள்தான் இப்போது இந்தக் கைங்கரியத் தையும் செய்திருக்கிறார்கள்.

நேரு சாஸ்திரியார்

ஆச்சாரியாரைப் போல கலப் பையைப் பிடிக்கவில்லை. அவரு டைய திருக்குமாரியையே பிடித்த தோட்ட மானேஜராகவோ, விளம் பர அதிகாரியாகவோ போட் ஜாம் ஜாம் என்று நாட்டு மக் ளுக்கு வழி காட்டியிருக்கிறா அவர் எப்படி வழிகாட்டியிருக் றார் என்பதை 24-7-49 தினமணி யில் முதல் பக்கத்தில் கட்ட கட்டிப் போட்டிருக்கும் செய்தி யை ஒரு முறை படித்துத் தெரிந் கொள்ளுங்கள். அதனுடை சாராம்சம் இதுதான். தோட்ட தில் ஒரு துளி இடம்கூடப் பாக் யில்லாமல் தென்னிந்திய மாவெள் ளிக் கிழங்குகளுக்கும் மதிப்பு கொடுத்துப் பலவகையான பயி கள், காய்கறிச் செடிகள் எல்லா பயிராக்கப்பட்டிருக்கின்றனவாம் ஆனால் அந்தத் தோட்டப்பண் ணையைப் பார்த்துச் செல்லவரு அதிகாரிகளை வரவேற்பதற்கா ஒரு பகுதி மட்டும் பயிரிடப்பட மல் ஒதுக்கப்பட்டிருக்கிறதாம் நேருஜி குடும்பத்தினர் இப்போ அரிசிச்சோறு உண்பதில்லையாம் வாரத்தில் ஒரு நாள் கோதுமை குப் பதில் 'ஓட்' என்கிற உணவு பொருள்தான் ஆக்கப்படுகிறதாம் சர்க்கரைவள்ளிக்கிழங்கு மாவை கோதுமையுடன் கலந்து சப்பாத் தயாரிக்கிறார்களாம்.

இதுதான் உணவைப் பெருக் பண்டிதர் காட்டியிருக்கும் வழி.

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

நாச சக்திகள் பெருகுகின்றன!

(•)

மொழிபற்றியும், கலாச்சாரம் ற்றியும், மதம் பற்றியும் நாம் செய்து வந்த பணிகளையெல்லாம் யனற்றதாக்கும் வகையில் அண் மையில் சில காரியங்கள் நடை பெற்று வருகின்றன.

முதலில் மொழி பற்றியே ஆராய் வாம். இந்தியா அல்லது அது பான்ற வேறு எந்த வடமொழி யா இந்த நாட்டில் எந்த வடிவில் ஙைழவதையும் அனுமதிக்கமாட் டாம் என்று பலகாலமாகவே றி வந்திருக்கிறோம். அதன் ாரணமாக மத்திய-மாகாண அர யலார் எவ்வளவு தூரம் அச்சங் காண்டு மொழிபற்றிய அவர் ளது முடிவில் தயக்கத்தையும், ணிவு இன்மையையும் கொண் ருந்தார்கள் என்பதை நாடறியும். னால் நமது இயக்கத்திற்குள் ன்று ஏற்பட்டுள்ள ஒருவித சல லப்பை காரணமாக வைத்துக் காண்டு இரயில்வே குழுவினர் Railway Board) ஒரு துணி மான உத்திரவை பிறப்பித்துள் னர். அதாவது S. I. R. & .S. M. இரயில்வே அதிகாரி ள் எல்லா இரயில்வே நிலையங் ளின் பெயர்களையும் இங்கிலீஷ், ிந்துஸ்தானி, தமிழ் ஆகிய இம் ன்று மொழிகளிலும் இருக்கச் சய்யவேண்டும் என உத்திரவு றப்பித்தும், இந்த வேலை செங் ல்பட்டுக்கும் தஞ்சாவூருக்கும் டையில் உள்ள நிலையங்களி ல்லாம் முடிந்ததென அறிவித் ம் உள்ளனர். இதுபற்றி நமது டவடிக்கை யென்ன வென்பதை ர்க்கார் உணர வழி செய்தாக வண்டும்.

இரண்டாவது நமது கலாசார லைபற்றி ஆராய்வோம். நமது ண்டைய உயர்ந்த இன-கலாசார நாகரீகத்தை அழித்தொழிக்கும் வல நிலைக்கு இந்நாட்டு இளை ர் சிலரை இலக்காக்கிவிடலாம் ன்ற எண்ணத்துடன் திராவிடத் ல் மீண்டும் R. S. S. வேலை வக்கப்பட்டுவிட்டது. நாட்டின் முற்போக்குசக்திகளை எதிர்த்துப் போராடத் திட்டமிட்டிருக்கும் பழமை விரும்பிகளும், பணமூட்டைகளும் தமது அய்க்கிய முன்னணிக்குக் கொண்டுவர R. S. S. காரர்களை கட்டவிழ்த்துவிடச் செய்துவிட்டனர். R. S. S. குறிக்கோள் என்ன என்பதைப்பற்றியும் அவர்கள் இதுவரை நாட்டிற்குச் செய்துவந்த சேவைபற்றியும், காந்திபடிகள் போன்ற பெருந் தலைவர்களையெல்லாம் கொலை செய்யக் கத் திட்டமிட்டதுபற்றியும் நாமறிவோம்—நாடுமறியும். அவர்கள் நிலை இவ்வாறிருக்க அண்மையில் சென்னைக்கு வந்திருந்த R S. S. இயக்கத் தலைவர் கோல்வால்கர் பத்திரிகை நிருபர் மாநாட்டில், அவர்களது இயக்கம் பலாத்கார முறையில் பணியாற்றியதையும், அதன் நடவடிக்கை யாவும் ரகசிய முறையில் இருந்துவந்ததையும், நாட்டுக் கொடியை அவமதித்துவந்ததையும் அடியோடு மறுத்துவிட்டார். அவர்களது இன்றையப் போக்கு மாறியிருக்கும் காரணத்தால், அவர்கள் சர்க்காரிடம் மன்னிப்புக் கோரியிருக்கக்கூடுமென சிலர் கருதுகின்றனர். நாம் கருதுவது அதுமட்டுமல்ல, பலரறிய முயற்சி எடுத்துக்கொண்டு பணியாற்றிய தோழர் வெங்கட்டராம சாஸ்திரியார் அவர்களின் சொல் ஜாலவித்தைகளிலே சர்க்கார் தமது சொந்த மதியை இழந்திருக்க வேண்டும் அல்லது அவர்களது கூட்டுறவு எதிர்கால ஏற்பாடுகளுக்குச் சாதகமாய் இருக்கும்என்பதாகக் கருதியிருக்கவேண்டும். இவைகளில் ஏதேனும் ஒன்று நிச்சயமிருந்தாகவேண்டும். ஏனெனில் அவர்களது பழையபோக்கிலே மாறுதல் இருப்பதாக யாரும் நிரூபிக்க முடியாது. அதன் உண்மையை அறிய, R. S S. தலைவர் கோல்வார்கர் பத்திரிகை நிருபரிடம் தமது போக்கில் மாறுதல் இல்லை என்பதையும், எதையும் விட்டுக்கொடுக்கவில்லை யென்பதையும் "Given up nothing" என்ற வாசகத்தின் மூலம் அறிவித்து விட்டார்.

அதுவுமன்றி, அவர்களது நடவடிக்கைகள்யாவும் இரகசியமற்றதென்றால், மயிலை ரசிக ரஞ்சினி சபாவிலே கூடிய கோல்வால்கரும் அவரது R. S. S. பிரமுகர்களும் தமது நடவடிக்கைகளை கவனிக்க பத்திரிகை நிருபர்களையாவது ஏன் அனுமதித்திருக்கக்கூடாது? இதனையும் நாம் கூறவில்லை. 'இந்து' பத்திரிகை 'The proceedings were not open to the press' என்று குறைப்பட்டிருக்கிறது.

எனவே அவர்களை எந்தக் கோணத்தினின்று நோக்கினாலும், அவர்கள் தமது பழைய போக்குகளை மாற்றிக்கொள்ளவில்லை என்பதையும், "ஆரிய மத வர்ணாஸ்ரம இராஜ்யத்தை"யே மீண்டும் ஸ்தாபிக்க ஆரியர்களால் எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவுகள் தான் இவைகள் என்பதையும் உணர முடியாமலில்லை. இதனை நன்கு மக்கள் உணரச்செய்யவும், தகாத காரியத்தில் மக்கள் தங்களை அறியாமலேயே பலியாவதையும் உடனே எச்சரிக்க வேண்டும்.

2—7—49 'குடி அரசு' இதழில் குறிப்பிட்டுள்ளது போன்று, கோலாப்பூர் சமஸ்தானம் நம்மைவிட தீவிரமாக ஆரியமத எதிர்ப்பு உணர்ச்சி கொண்டுள்ளது. மீண்டும் முதன்முறையாக 21—7—49 தேதி நடக்கவிருந்த R. S. S. கூட்டம் அந்த சமஸ்தான மக்களின் கல்வீச்சுக்கும், கோல்வீச்சுக்கும், கலவரத்துக்கும் இலக்காகி R S S. காரர்களை போலீஸ் படை வந்து காப்பாற்றுமளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டது. பம்பாயிலும் பிற இடங்களிலும் மக்கள் தங்களது அதிருப்தியைக் காட்டிக் கொண்டுள்ளனர்.

கல்லையும்கட்டாரியையும்கொண்டுதான் மக்கள் அதிருப்தியைக் காட்டவேண்டும் என்பதல்ல நமது விருப்பம், பலாத்காரமற்ற முறையில் பாஸிஸ்டு இயக்கத்தில மக்கள் பலியாவதைத் தடுக்க அதன் வண்டவாளத்தை அம்பலப்படுத்த வேண்டும் என்பதுதான்.

மதம் பற்றியும் சிறிது ஆராய்வோம். எங்கு நோக்கினும் மதவாதிகள் சற்று களிப்புடனும்,

(தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க)

குடி அரசு

30—7—49 சனிக்கிழமை.

தைரியமான மசோதா!

சென்னை மந்திரிசபையினர், நவம்பர் மாதத்தில் கொண்டுவரப் போகிறோம் என்று சொல்லி, இப்போது பொதுமக்கள் கருத்தறிய வெளியிட்டிருக்கும் சென்னை விவசாயிகள் மசோதாவையே தைரியமான மசோதா என்று கூறுகிறோம். இப்படி ஒரு மசோதா கொண்டு வந்து சட்டமாக்கினால்தான், உண்மையில் உணவு நெருக்கடியை ஒழித்துக் கட்ட முடியும் என்கிற முடிவுக்கு வந்ததானது, மந்திரிசபையினரின் தைரியத்தை மட்டுமல்ல, இப்போதைய நிலையில் பிரச்சினைக்கு எது பரிகாரம் என்பதையும் ஓரளவு காட்டுகிறது.

முதலில் மசோதாவின் அடிப்படையை—சாராம்சத்தைக் குறிப்பிடுவோம்.

(1) (சென்னை மாகாணத்தில்) பயிரிடப்படாமல் தரிசு நிலங்களாகப் போட்டுவிடுவதை அனுமதிக்க முடியாது.

(2) உணவுப் பொருள் விளைவிக்கவேண்டிய நிலத்தில், வியாபார லாப நோக்கத்தோடு வேறு பயிர்கள் பயிரிடுவதை அனுமதிக்க முடியாது.

நிலங்களில் இத்தகைய விதைகளையே, இன்ன வகையான பயிரையே சாகுபடி செய்யவேண்டுமென்பதைச் சர்க்கார் வரையறுக்கும்.

(3) ஒரு நிலத்தின் சாகுபடியில் போதிய திறமை காட்டப்படவில்லை என்றால், திறமை இல்லாதவர் கையை விட்டு நிலத்தின் நிர்வாகத்தை மாற்றவும்—நிலத்தையே சுவாதீனப்படுத்திக்கொள்ளவும் சர்க்காருக்கு உரிமையுண்டு.

இந்த மூன்று திட்டங்களை அடிப்படையாகக் கொண்டே, இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டங்களைப் பார்க்கும் போது, எந்த நோக்கத்தோடு இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை விளக்க வேண்டியதில்லை.

உழவுத் தொழிலையே முக்கியமான பெருந்தொழிலாகக்கொண்டு நாட்டில் பெரும்பான்மையான மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்துங்கூட, வாழ்க்கைக்கு ஜீவாதாரமான உணவுப் பொருளுக்கு, பிறநாடுகளுக்கு கைகட்டி நின்றே, கெஞ்சிக் கூத்தாடியே வாழ்ந்தாக வேண்டுமென்கிற, பரிதாபகரமான—வெட்கப்பட வேண்டிய இழி நிலை இல்லாதொழிய வேண்டும் அதாவது நமக்குத் தேவையான உணவை நாமே உற்பத்திசெய்துகொள்ள வேண்டும் என்பதைத் தவிர, வேறு எந்த நோக்கமும் இல்லை என்பது வெளிப்படை.

இந்த மசோதா, எந்த நோக்கத்தோடு கொண்டுவரப் படுகிறதோ, அந்த நோக்கம் ஈடேறிவிடுமா?

இந்த ஒரு கேள்வியைத்தான் மசோதாவைச் சீர்தூக்கிப் பார்ப்பவர்கள் முதல் கேள்வியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

பிரச்னை, உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய பிரச்னை என்பதை ஒப்புக்கொள்ளக்கூடிய எவரும், இந்தக் கேள்வியைத் தவிர வேறு எந்தக் கேள்விக்கும் முதலிடம் தரமாட்டார்கள் என்பது நிச்சயம்.

இந்த மசோதாவிற்கு உண்டாகியிருக்கும் எதிர்ப்புகளை நோக்கும் போது, மசோதாவின் அடிப்படைத் திட்டங்களை ஒப்புக்கொண்டுதான், ஒவ்வொருவரும் மசோதா நிறைவேறக் கூடாது என்று குறைகூறுகிறார்கள்.

அடிப்படையை ஒப்புக்கொள்வது உண்மை என்றால், மசோதாவானது "இந்த இந்த வகையில் இப்படித் திருத்தப்பட வேண்டும்" "இந்தப் பிரிவுகளை நீக்கிவிட வேண்டும்" என்கிற முறையில் திருத்தம் சொல்வதுதான் நியாயமா? மசோதாவையே தலைமுழுகிவிடவேண்டும் என்று முழக்கமிடுவது நியாயமா?

எதிர்ப்பவர்கள் சொல்லும் காரணம் எல்லாம் இரண்டுதான். ஒன்று விவசாயிகளுக்குத் தேவையான உதவியோ, விவசாய முன்னேற்றத்திற்கு வேண்டிய விஞ்ஞான அறிவையோ, சர்க்கார் இதுவரை வழங்கி வரவில்லை. மற்றொன்று, மசோதாவை அமுலுக்குக் கொண்டுவர சர்வாதிகாரப் போக்கைச் சர்க்கார் கடைப்பிடிப்பதாயிருந்தால், லஞ்ச ஊழல் பெருகி, விவசாயிகளுக்குத் தொல்லையையும் தொந்தரவையும்தான் கொடுக்கும். ஆகவே மசோதாவையே கைவிட்டு விடவேண்டும் என்கின்றனர்.

நம்நாட்டு விவசாயிகளுக்கு விஞ்ஞான முறையில் வளர்ச்சியில்லை என்பதும், எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள நிலைமையிலேயே நம் நாட்டு விவசாய அறிவு இருந்து கொண்டிருக்கிறது என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

விவசாயிகளுக்குத் தேவையான உதவியைச்சர்க்கார் செய்வதில்லை என்கிற குறைபாடு நூற்றுக்குநூறு உண்மை. அதிலும் இப்போதைய சர்க்காருக்கு, அப்படி உதவி செய்வதற்கான தகுதியேயில்லை என்பதையும், இப்படிப்பட்ட அரசியல் அமைப்பில் யாராயிருந்தாலும் விவசாயிகளுக்குத் தேவைப்பட்ட பொருளை வழங்கிவிட முடியாதென்பதையும் ஒப்புக்கொண்டு ஓமந்தூராரே கூறுகிறார்.

அவர் பிரதமராயிருக்க போது, விவசாயத் தேவைக்கு 40000 டன் இரும்பும், உருக்கும் கேட்டதற்கு மத்திய சர்க்கார் 5000 டன் இரும்புதான் கொடுத்தார்களாம். அதிலும் ஒருபாதி உபயோகத்திற்கே லாயக்கில்லாததாம். உபயோகப்படக்கூடிய இரும்பிலும், விவசாயத்திற்கு அதைப் பயன்படுத்தாமல் வீடுகட்டும் காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது என்று முறையிடுகிறார். மேலும் வண்டிப்பட்டாக்கள் சம்பந்தமாக 6 தடவை மத்திய சர்க்காருக்கு எழுதினேன். பண்டிதருக்குக்கூட எழுதிப்பார்த்தேன் பயனில்லை என்று கதறுகிறார்.

தென்னாடு என்றால் செவியை

முடிக் கையைக்கட்டிக் கொண்டு விடும் மத்திய சர்க்காரை எஜமானர்களாகக் கொண்டிருக்கும் அமைப்பில், தென்னாட்டு மக்களுக்குத் தேவையானதைச் செய்ய முடியாது என்பதைத்தானே இந்த முறையீடும்கதறலும் உணர்த்துகின்றன?

சட்டம்அமுலாக்கும் முறையில், இப்போதைய அமைப்பில் லஞ்ச ஊழல்தான் பெருகும் என்பதையும் நாம் மறுக்கவில்லை. பெருகுவதற்குக் காரணம் என்ன? காரணத்தைக் கண்டு—அல்லது தெரிந்து கொண்டிருக்கும் காரணத்தையல்லவா ஒழிக்கவேண்டும் என்றுதான் கேட்கிறோம்.

ஆனால் இப்போதைய பார்ப்பனீய—பனியா அடிமை சர்க்காருக்கு; விவசாயிகளுக்கு விஞ்ஞான அறிவைப் புகட்டவோ, தேவையான விவசாயப் பொருள்களை வழங்கவோ, தம்மைச் சேர்ந்தவர்கள்—அதிகாரிகளின் லஞ்ச ஊழலைப் போக்கவோ, திறமில்லை—திடமில்லை என்று வெளிப்படையாகக் கூறுவார்களானால் நாம் ஏற்கத் தயார்.

அதைச் சொல்வதற்கு அஞ்சிக் கொண்டு அல்லது அதை மறைக்க வேண்டுமென்று எண்ணிக்கொண்டு மசோதாவையே கைவிட்டுவிட வேண்டுமென்பதில் என்ன அர்த்தம் என்றுதான் கேட்கிறோம்.

எனவே, தேவையான மசோதா; ஆனால் சென்னை சர்க்காரால் செயல்படுத்தமுடியாத மசோதா, என்பதை வற்புறுத்திக் கூறுகிறோம்.

ஆனால் உணவு நெருக்கடி தீர, கவர்னர் ஜெனரல் கலப்பை பிடித்துக் காட்டும்போது, நம் சென்னை மந்திரிகள் இதென்ன பித்தலாட்டம் என்று கன்னத்தில் அறைவதுபோல், உணவு நெருக்கடி தீர வேண்டுமென்றால், இன்ன இன்ன முறைகளையல்லவா கையாள வேண்டும் என்று சொல்லுவது மாதிரியில், இந்த மசோதாவை வெளியிட்டிருப்பதைப் பார்க்கும் போது இதைத் "தைரியமான மசோதா" என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்வது?

—O—

பெரியார் ஈ.வெ.ரா. அறிக்கை

வருத்தமும் விஞ்ஞாபனமும்

சமீபத்தில் நான் எனது சொந்த விஷயமாய் மேற்கொண்ட தன்மை பொது மக்களுக்கும், மற்றும் கழகத் தொண்டர்கள், அனுதாபிகள் என்போருக்கும் அருவெருப்பை உண்டுபண்ணி இருப்பதை நான் மனப்பூர்வமாய்த் தெரிந்துகொண்டேன். எனது பத்திரிகையில் நான் எனது மேற்படி காரியம்பற்றிப் பல தடவைகள் விளக்கமும், சமாதானமும் எழுதியிருந்தபோதிலும், எனது மேற்படி செய்கை அதாவது நான் திருமணம் என்பதுஆக ஒன்று செய்துகொண்டது ஆனது, சில சந்தர்ப்பத்தில் எனக்கு ஏற்படும் அவசர புத்தி காரணார்த்தமாகவேதான் என்று தெரிவித்துக்கொண்டு விடுகிறேன். பல பேரின் மனக்கசப்பைப் பெற்றுவிட்டேன். எனக்கும் மனக்கிலேசம் தான். எனது தொண்டர் ரெத்தின—மாணிக்கங்களும், கழக முக்கியஸ்தர்கள் எனப்படுவோரும் இந்தத் திடீர்த் தவறைப் பொறுத்தருள வேண்டும். பொதுமக்களும் மறந்துவிடுவார்களாக! போகட்டும். நடப்பதை யோசிப்போம்.

ஈ. வெ. ராமசாமி,
தலைவர், திராவிடர் கழகம்.

முதலாளித்துவம்.

"அமெரிக்க முதலாளித்வம் பற்றிய நூற்றுக்கணக்கான உண்மைகள்" என்கிற நூலில் தோழர் பாச் விளக்கியுள்ள கருத்தில் சில பகுதிகள் இவை:-

கேள்வி:- அமெரிக்க முதலாளிகள் யாருக்கு விஸ்வாசம் செலுத்துகிறார்கள்?

பதில்:- டாலருக்கு.

கே:-டாலருக்கு வெள்ளை மாளிகையின் அர்த்தம் என்ன?

ப:- பிறநாடுகளில் அரசாங்கக் கதவு திறக்கும் மாயக் கருவி.

கே:- டாலருக்கு தொழிலாளியின் அர்த்தம் என்ன?

ப:- வரி செலுத்தும் வழி. வாழ்வதற்கு தம்படியே மிஞ்சும்.

கே:- அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் சுலோகம் என்ன?

ப:- முன்பு 'போட்டியிலும் சுதந்திரம்' இன்று 'உலக ஆதிக்கம்'.

கே:- இரண்டாவது உலக யுத்தத்தில் அமெரிக்காவின் செலவென்ன?

ப:- மக்களுக்கு 22000 கோடி டாலர். முதலாளிகளுக்கு 15000 டாலர் கொள்ளை லாபம்,

கே:- முதலாளிகள் யுத்தத்தை விரும்புகிறார்களா?

ப:- கொலைக் காண்டத்திற்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்.

கே:- அமெரிக்க முதலாளித்வத்தின் பலன் என்ன?

ப:- பொருளாதார நெருக்கடி அதன் சாபக்கேடு. 2-கோடியிலிருந்து 3-கோடி பேர் வேலையில்லாக் கொடுவாளில் சிக்குண்டது.

கே:- அமெரிக்காவிலுள்ள சுதந்தரமென்ன?

ப:- மிஞ்சிநிற்பது ஒன்றுதான். நியூயார்க்கிலுள்ள சுதந்திரச் சிலை.

கே:- தொழிலாளருக்கு உள்ள உரிமை என்ன?

ப:- பட்டினியையோ, மரணத்தையோ அல்லது அரைப்பட்டினியையோ தேர்ந்தெடுப்பது.

கே:- முதலாளிகளுக்கு கலையைப்பற்றிய கருத்தென்ன?

ப:- வாங்குவது-விற்பது, லாபத்திற்கான கருவி.

கே:- அமெரிக்க இலக்கியம் வாசகர்களுக்கு தரும் உணர்ச்சியென்ன?

ப:- மிலேச்சத்தனம், கொலை வெறி, காமக் கிளர்ச்சி.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ஏதோ இனி வெற்றி தங்களுக்குத் தான் என்பதுபோலவும் தமது காரியங்களைச் சற்று ஜரூராகவே செய்துவருகிறார்கள். பகலவன் ஒளிமுன் உறையும் பனிபோல இவர்கள் நமது பிரசார பீரங்கிகளுக்கு எதிராக நிற்க வகையற்று ஓடிவிடுவார்கள், இன்னும் சில நாட்களில். இவர்களைப்பற்றிக் கவலை இல்லை நமக்கு.

ஆனால் மத வெறிகொண்ட சிலர் சோஷலிஸப் போர்வையில் நாட்டு மக்களில் சில்லரை ஏய்த்து வருவதை அம்பலப்படுத்தியேயாக வேண்டும். ஒரே ஒரு சாம்பிள்.

“தியாகி” இதழாசிரியர் தோழர் இராம சடகோபன் என்னும் பிராமணோத்தமர். கருஞ்சட்டைப் படையினருக்கெதிராக வெண்சட்டைப் படை ஒன்றினை அமைக்க அரும்பாடுபட்டார் சில காலத்திற்கு முன். அதுமட்டுமல்ல கம்பரசத்திலே “கீதா” மாத்திரையிட்டு காந்தீயத் தேன் சிறிது கலந்து உவகையோடு ஊட்டியும்வருபவர் தனது இதழ்மூலம். ராம்—ரஹீம் கூட்டுறவைக் காட்டி இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காகப் பாடுபடுவதாகக் காட்டிக்கொண்டவர்-நம்பினவர் சிலரும். இவர் பலகாலமாக முயற்சிக்கிறார் நாட்டின் முற்போக்குக் கட்சியான திராவிடர் கழகத்தை ஒழித்துக்கட்ட. தன் தகுதிக்கு மீறிய பணியென்பதையும் யூகித்தறியாத குறைமதியாளர்போலும், பாவம்.

இவரின் வரலாறே ஒரு புதுமை. மயிலையிலே தோழர் வ. ரா. அவர்களைப் போஷகராகக்கொண்ட பாரதி மன்றம் ஒன்றிருந்தது. அதிலுள்ள உறுப்பினர் சிலரைச் சேர்த்து “சுதந்திர தேசிய ஜனநாயகக் கட்சி” என்ற ஒரு சர்வதேசியக் கட்சியைத் துவக்கினார் வெண்சட்டை வீரர். சிந்துவாரில்லை, “அந்தணர் அரங்கம்” ஒன்றினைக் கண்டார். இன உணர்ச்சியற்ற திராவிடர் ஒரு சிலரையும் அப்புறப்படுத்திவிட்டது அவர் தம் செயல். இன்று ஆரியர் என்று கூடத் தன்னை கருதிப் பெருமையடைகின்ற டாக்டர் சுப்பராயன் போன்றவர்களை ஒன்று கூட்டி “உணவு முனை” (Food Front) என்பதாக ஒரு இயக்கத்தை துவக்கியுள்ளார். தோல்விப் பாதையிலே மிக வேகமாக முன்னேறிக் கொண்டுள்ள இவர், இந்த “உணவு முனை”யும் ஜீரணமாகாவிட்டால் ஒரு “பெருங்காய முனை”யும் அதிலும் திருப்தியடையவில்லையானால் “சந்தன முனை” “விசிறி முனை” ஆகிய ஜீரணிக்கத்தக்க பூஜா சேவா முனைகளை விரைவில் கண்டு, எம்பெருமான் பாதாரவிந்தங்களை நாட. இறுதியாக “தர்ப்பைப்புல் முனை”, “கிழிந்த பஞ்சாங்க முனை”களையும் காணுவாரென்று எதிர்பார்க்கலாம்.

ஆக மேற்கூறிய மொழி—கலாச்சார-மத துறைகளில் மாத்திரமல்லாது எல்லாத் துறைகளிலும் நமது பணி—தீவிரமான பணி இக்காலத்தில் மிக மிக அவசியம்.

—மயிலைநாதர்.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

சந்ததி விருத்தி.

கல்யாணத்தின் இந்த முக்கிய நோக்கத்தையே மக்கள் வலியுறுத்தி வந்திருக்கின்றார்கள். நாகரீகமடையாத அநேக ஜன சமூகங்களில் கலியாண நடத்தையை, பலவித பழக்க வழக்கங்களைக் கொண்டு நிலைக்கச் செய்து வந்திருக்கின்றனர். காட்டுமிராண்டிகளில் கலியாணமில்லாத பிரமச்சாரியைக் காண்பதரிது. வயது வந்ததும் அவனவன் கூட்டங்களுக்குரிய பழக்கப்படி ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளுகின்றான். காட்டுமிராண்டிகள் நம்மைவிட அடுத்தடுத்து கலியாணம் செய்து கொள்வதாக அவர்களின் மாபெரும் அதிகாரியாகிய வெஸ்டர் மார்க் கூறுகின்றார். இந்தப் பழக்கத்தையே நாகரீகமடைந்த பல கூட்டத்தாரும் பல கட்டுத்திட்டங்களால் வற்புறுத்தி வருகின்றனர்.

சீன தேசத்தில் யாராயிருப்பினும் வயது வந்தவுடன் மணம் புரிந்து கொள்ளவேண்டுமென்று கட்டாயப்படுத்துகின்றார்கள். ஆதி ரோமபுரி நாகரீகத்தில் மணம் புரிந்து கொள்ளும் வயது, ஆணுக்கு 14-ம், பெண்ணுக்கு 12மாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த வயதையே ஆதி கிறிஸ்தவர்களும் அங்கீகரித்தனர். இந்துக்களுக்குள் வழங்கிவரும் “பிள்ளை இல்லாதவன் புத் என்னும் நரகத்துக்குப் போவான்” என்ற கட்டுக்கதையும், இந்தக் கல்யாணத்தின் முக்கிய கருத்தையே வற்புறுத்த ஏற்பட்ட விதியாகும். பிள்ளைகளைப் பெற யாகங்களும் யாத்திரைகளும், மந்திர தந்திரங்களும் நமது நாட்டு மக்கள், பல்லாண்டு பல்லாண்டாகச் செய்து வருவதும், இந்த சந்தான விருத்திக்கே. தசரதனுக்கு மூன்று மனைவியர்மூலமாக பிள்ளை இல்லாமற் போனபோது புத்திர யாகம் செய்து, ராம, லட்சுமணர்களைப் பெறப்பட்டான் என்ற கதையிலிருந்தும். மக்களுக்குள் சந்தான விருத்தி எவ்வளவு ஆவலுடன் பாதுகாக்கப்பட்டதென்று யூகிக்கலாம்.

மூட மதமும் மூட விஞ்ஞானமும்.

இத்தியாதி பூர்வீக நோக்கம் பலவித காரணங்களால் சிதைந்து வந்திருக்கின்றது. ஆதிகாலமுதல் மதப்பித்தால் கல்யாணத்தை இகழ ஆரம்பித்தனர். இந்து ஆகமங்களில் பிரமச்சரியத்தை (Celebacy) புகழ்ந்து கூறப்பட்டுள்ளது. சந்நியாசிகளென்ற ஒரு பெருங் கூட்டத்தார், இந்த மூடப் பழக்கத்தைக் கையாளவந்தனர். ஆதி புத்தர்களும், பிரமச்சாரி வைராக்கியத்தைக் கைக்கொண்டனர். இந்த வைராக்கியம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் உண்டாக்கப்பட்டது. லட்சக்கணக்கான ஆண்மக்களும், பெண்மக்களும் சந்தான விருத்திக்கே உதவாமல் போயினர். கிறிஸ்துவர்களும் (Celebates) பிரமசாரி என்ற கூட்டத்தில் ஏராளமாகச் சேர்ந்தனர். இந்தக் கொடிய திட்டத்திற்கு மிகுதியும் கட்டுப்பட்டவர்கள் ரோமன் கத்தோலிக்கர்என்றே கூறலாம். பெண்களைத் தொடாதிருப்பதே நலமென்றார்” செய்ட் பால் (Saint Paul) இத்தியாதி கடுமையான திட்டங்கள் மக்கள் இயற்கைக்கு விரோதமாக ஏற்பட்டதற்கு மதங்களே முக்கிய காரணம். பெண்களை அமங்கலி என்றும், விதவைகளென்றும், பேயென்றும், பிசாசு என்றும் இகழ நேரிட்டதும் இந்த மத வைராக்கியத்தாலென அறிக. இந்த மத வைராக்கியமும் இன்னொரு மூட மத நம்பிக்கையால் வந்தது. மனிதனுக்குள் ஆன்மா என்று கற்பித்துகொண்டு அவ்வான்மா மோட்

சமடைய உடலைவிட்டுப் பிரிய வேண்டுமென்று இன்னொரு கற்பிதத்தையும் உண்டாக்கி அதற்காகத் திரேகத்தை வருத்தி உடலை நாசம் செய்யத் தலைப்பட்டனர். இதைத்தான் "தவம்" என்றும் "யோகம்" என்றும் "ஜீவன் முக்தி" என்றும் பெயரிட்டு உடலை வருத்திவந்தனர். இதனை உடலை வருத்தும் சித்தாந்தமென்பர். வேதங்களிலும், பௌத்த புத்தகங்களிலும், கிறிஸ்துமத சரித்திரப் புத்தகங்களிலும் இந்த அகோர நடவடிக்கைகளைப் பார்க்கலாம். கங்கை, யமுனை நதிக்கரையிலும் இவ்விதக் கொடூர தவம் புரிவோரை இன்றைக்கும் காணலாம். ஒரு காலத்தில் கிருஸ்து உலகில் அய்ந்து முடியைக் கட்டிவைத்துக்கொண்டு இரத்தம் ஒழுகத் திரேகத்தை அடித்தனர். இத்தியாதி கொடுமையை போன்றது பிரமச்சாரி தத்துவமும் இந்த பிரமச்சாரி தத்துவத்திலிருந்து பிறந்தது பெண்மக்களை இழிவுபடுத்தும் சித்தாந்தமென அறிக. புருஷன் இறந்த பெண்மக்களை மொட்டை அடிப்பதும், அழகை வெறுப்பதும், அகோர வாழ்க்கைக்குட்படுத்துவதும் இந்த பிரமாச்சாரி மூடத்தத்துவத்தால் நேர்ந்தது. பெண்கள் நிலைமை தாழ்த்தப்பட்டதெல்லாம் இத்தியாதி மூட மதக்கொள்கைகளால் விளைவுற்றன. பலகோடி வருஷங்களாக இவர்கள் தங்கள் இனத்தை நசித்துப்போக வொட்டாமல் ஏற்பட்ட கல்யாணமென்ற ஆண் பெண் இயற்கைக் கூட்டுறவை, துர் உபயோகத்திற்கு கொண்டுவரச் செய்ததும் இந்த மூட மதங்களாலெனவும் அறிக. மூட மதங்கள் இந்த புராதீன இயற்கை சம்பர்த்தத்தை இவ்வாறாக இழிவு படுத்த மூட விஞ்ஞானமும், இன்னொரு பக்கம் கல்யாணத்தைப் பாழ்படுத்த ஆரம்பித்துவிட்டது. கல்யாணத்தால் மக்கள் அதிகரித்து விடுகின்றார்களாம். அவர்களுக்கு உணவு போதாதாம். ஆதலின் பிறக்கும் மக்களைக் குறைக்க பிரஜா தடைசெய்துகொள்ள வேண்டுமாம்! இதைத்தான் கர்ப்பத்தடை என்று வழங்குகின்றார்கள். இதனை பொய்விஞ்ஞானமென்று கூறல் வேண்டும். மதங்களாலும், பொய் விஞ்ஞானத்தாலும்; இழிவு அடைந்துவரும்

நாடகங்களுக்குத் தடை!

கரூரில் நடிகவேள் தோழர் ராதா அவர்களைக்கொண்டு ஸ்பெஷலாக (23, 24—7—49) 2 நாட்களுக்கு ஏற்பாடு செய்திருந்த நாடகங்களைத் தடைசெய்து, தியேட்டர் சொந்தக்காரருக்கும், கரூர் திராவிட கழகத்தாருக்கும், மூன்று நாடகங்களுக்கும் 144-போட்ட கரூர் மாஜிஸ்திரேட் உத்திரவை எதிர்த்து, நாடகங்களுக்கு 144-போடுவதை ஆட்சேபித்து, நடிகவேள் சென்னை ஹைகோர்ட்டில் விரைவில் வழக்குத் தொடர்வார் எனத்தெரிகிறது.

கலியாண வாழ்க்கை, இன்னும் பல காரணங்களால் கெட்டுவர நேரிட்டது. இதனை சுருங்கக் கூறி விடுவோம்.

மணவாழ்வுக்குத் தடைகள்.

தற்காலத்தில், பொருளாதார நெருக்கடியால் கலியாணம் செய்து கொள்ளாமலே ஆணும்பெண்ணும் இருந்து வருகின்றார்கள். இந்த காரணத்தின் நிமித்தம் கலியாணத்தை ஒத்திவைத்துக் கொள்கிறார்கள். கலியாணம் பழிக்க நேரிட்டபடியால் அந்தந்த சமயத்திற்கு ஆணும் பெண்ணும் கூடிப்பிரிந்து விடுகிறார்கள். இந்தக் கொடுமையால் திக்கற்ற பிள்ளைகளும், திக்கற்ற பெண்மக்களும், உலகில் அதிகரித்து வருகின்றனர்.

இன்னொரு விபரீத காரணத்தாலும், கலியாணம் தடைப்பட்டு வருகிறது. அதாவது புருஷனை இழந்த பெண்மக்கள், கலியாணம் செய்யப்படாதென்ற நிர்ப்பந்தத்தால் அநேக பெண்மக்கள் மறு கலியாணமில்லாமலே கஷ்டப்படுகின்றனர். இந்த துர்ப்பழக்கம் பெண்மக்களை இழிவுபடுத்தியதால் நேர்ந்தது. இன்னுஞ் சில பழக்கங்களால் கலியாணம் தடைப்படுகிறது. ஆதியில் கலியாணம் சம்போகத்திலிருந்து பெறப்பட்டதென்று குறித்துள்ளோம். உயிர்கள் உயர்ந்துவர வர முக்கியமாக சமுசார வாழ்க்கைக்காகவே கலியாணம் ஏற்பட்டது. இந்த சமுசார வாழ்க்கைக்கு இரண்டுதுணைவருடைய சம்மதம் வேண்டும். சம்மதமில்லாமல் சமுசாரம் நிகழாது. ஆதலின் சம்மதி இல்லாத கூட்டுறவு சமுசாரத்திற்கே அழிவை விளைவிக்கும். இந்தக் காரணத்தால்தான் பிரியமில்லாத கூட்டுறவை பலவந்தப்படுத்தக் கூடாதென்றும், வேண்டும்போது புருஷனும், பெண்ஜாதியும் பிரிந்துவிடலாமென்றும் ஆதிகால நாகரீக முதல், தற்கால நாகரீகம் வரை, விவாகரத்தை ஆதரித்து வரப்படுகின்றது. இதனை அதாவது விவாகரத்தைத் தடை செய்து வருவதும் மதங்களென அறிக.

மதத்தின் ஆபாசம்.

மதங்கள் பிரஜா விருத்திக்குத் தடையாகவே இருந்து வருகிறது. பல்லாயிரம் மக்களைக் கலியாணம் செய்து கொள்ள விடாமல் தடை செய்துவரும் மதங்கள் கர்ப்பத்தடையை எதிர்ப்பதென்றால், அது என்ன ஆபாசம்! சமுசார வாழ்க்கையை நடத்த முடியாத கலியாணத்தை ரத்து செய்யக் கூடாதென்கிறார்கள்! ஆனால் பல்லாயிரம் பேயரைக் கலியாணம் செய்து கொள்ளக்கூடாதென்கின்றார்கள்! இந்த மூர்க்கக் கட்டுத் திட்டங்களால் மதங்கள் பிரஜா விருத்தியைத் தடை செய்து வருகின்றன. கர்ப்பத்தடை கோஷ்டியார் மாத்திரம் பிரஜா விருத்தியை அடக்குங்கள் என்றால், சமயங்கள் கத்தியைத் தீட்டுகின்றன! மதங்களின் ஆபாசத்தை என்னென்று மதிப்பது!!

(தொடரும்)

குமாரபாளையம் திராவிடர் கழகம்.

கு. பாளையம் ஜூலை 26—

குமாரபாளையம் (சேலம் மாவட்டம்) திராவிடர்கழக செயற்குழுக் கூட்டம் 25-7-49-ம் நாள் திங்கட்கிழமை மாலை 5-மணிக்கு கூடியது. செயற்குழு உறுப்பினர் அனைவரும் வந்திருந்தனர். (ஒருவர் தவிர)

தீர்மானங்கள்.

1. பெரியார் மணியம்மை திருமணத்தால் இயக்கத்துக்கு எந்தவித இடையூறும் கிடையாதாகையால், தலைவர் பெரியார்—மணியம்மை திருமணத்தை இச் செயற்குழு கூட்டம் முழு மனதுடன் ஏற்றுக் கொள்ளுகின்றது.

2. தலைவர் பெரியார் அவர்களே இயக்கத் தலைவராக இருக்கும்படி இச்செயற்குழுக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

உடுமலை வழக்கு

—(●)—

ஆகஸ்ட் 2-ல் மீண்டும் விசாரணை

உடுமலைப்பேட்டை ஜுலை 25. 16-4-49-ல் உடுமலைப்பேட்டையில் பிறப்பித்திருந்த தடையுத்திரவை மீறி கூட்டம் நடத்த முயன்ற குற்றம் சுமத்தி, பெரியார் அவர்கள் மீதும் ஏனைய மூன்று தோழர்கள் மீதும் 143, 188 செக்ஷன்களின்படி தொடரப்பட்ட வழக்கு 16-7-49-ல் உடுமலைப்பேட்டை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதென்பதையும், பின் இன்றைக்கு (25-7-49) அந்த வழக்கு ஒத்தி வைக்கப்பட்டதென்பதையும் தோழர்கள் அறிவர்.

இன்று பகல் 1-50 மணிக்கே பெரியார் அவர்கள் கோர்ட்டுக்கு வந்துவிட்டார்கள். தோழர்களான மதியழகன், தங்கவேலு, நாராயணன் ஆகிய மூவரும் பிறகு வந்து சேர பகல் 2-மணிக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

விசாரணைக்கு முன்னதாக ஒரு மேஜை, இரண்டு நாற்காலிகள், ஒரு பெஞ்சு, இரண்டு பெற்றோமாக்ஸ் லைட்டுகள், கழகக் கொடி ஆகிய 7 (பயங்கரமான!) ஆயுதங்களையும் கோர்ட்டுக்கு வெளியிலும், உள்ளும் வைக்கப்பட்டிருந்தன.

பிராசிகியூஷன் தரப்பில் உடுமலைப்பேட்டை சர்க்கிள் இன்ஸ்பெக்டரும், கணக்கம்பாளையம் தலையாரியும், உடுமலை காங்கரஸ் கமிட்டி செயலாளர் தோழர் மகாலிங்கமும் விசாரிக்கப்பட்டனர்.

சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யப்போகிறீர்களா என்று மாஜிஸ்திரேட் கேட்டதற்கு கழகக் கொள்கையின்படி விசாரணையில் கலந்துகொள்வதில்லை என்றும், இறுதியாக ஒரு ஸ்டேட்மெண்ட் மட்டும் தாக்கல் செய்யப்போவதாகவும் பெரியார் தெரிவிக்க, மற்ற மூன்று தோழர்களும் அவ்வாறே தனித் தனியாக ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்வதாகத் தெரிவித்தனர்.

காங்கரஸ் செயலாளர் விசாரணைக்குப் பதில் அளித்துவந்த போது, கோர்ட் ஹால் முழுதும் நகையொலி அலைமோதியது என்

ஜாமீன் பறிமுதல் வழக்கு

சென்னை ஜுலை 25—'விடுதலை' முன்பு கட்டியிருந்த ரூ. 2000 ஜாமீன் தோகையைப் பறிமுதல் செய்திருப்பதை எதிர்த்து, இன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் அப்பீல் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

(6ம் பக்கத்தொடர்ச்சி)

ஏர் பிடிக்கும்

ஆச்சாரியார், எந்த அளவுக்கு உணவைப்பெருக்க வழிகாட்டியிருக்கிறார் என்று கேட்கிறேன். ஸ்பெஷல் நாடகங்களில் 500, 1000 ரூபாய் கொடுத்துக் கொண்டு வரப்படும் ஸ்பெஷல் நடிகர்கள், கதையில் வரும் ஒரு அழுகைக் காட்சியை மேற்கொள்ளும்போது, கண் கலங்காமல், குரல் தழதழக்காமல், கனத்த குரல் எழுப்பிக் கணீர் கணீர் என்று ஒரு பாட்டைப் பாடிவிட்டே அப்ளாஸ் வாங்கி விடுவதைப் போலத்தான், ஆச்சாரியாரும் ஜிப்பா மணிக்கட்டில் புரள, பஞ்சகச்சம் பாதத்தை மறைத்து நிற்க, கண்ணாடியோடு கலப்பை பிடித்து நின்று அப்ளாஸ் வாங்க எண்ணியிருக்கிறாரே தவிர வேறென்ன?

உல்லாசபுரியின்

அதிபதியான நேரு அவர்கள், தமது ஓங்கி உயர்ந்த மாட மாளிகைக்குப் பின்னாலுள்ள காலி பிடத்தில், வேலையாட்களைக் கொண்டு தோட்டப்பயிர் போடச் செய்து, அதை விளம்பரப்படுத்தப் பெரும் பொருள் செலவு செய்திருக்கிறாரே தவிர, வேறு எந்த அளவுக்கு உணவைப் பெருக்க வழி காட்டியிருக்கிறார் என்று கேட்கிறேன்.

இது பித்தலாட்டமா

அல்லவா? உண்மையிலேயே உணவைப் பெருக்கும் வழி விஞ்ஞானத்தின் துணையை-ஆதரவை முழுக்க முழுக்கப் பெற்றால்தான் முடியும் என்பதை மற்ற நாட்டினர்கள் காட்டி வரும்போது, இந்துஸ்தானத்தின் மூலஸ்தானரும் உற்சவ மூர்த்தியும், ஸ்பெஷல் புராண நடிகர்களாக ஒப்புக்கு நடிக்கிறார்கள் என்றால் மனமறிந்த பித்தலாட்டமேதவிர வேறென்ன? இந்த அரசியல் ஆதிக்கப் பிரசாரத்திற்காக, அதாவது நம் நாட்டுக் கவர்னர் ஜெனரலும், முதல் மந்திரியுமே கலப்பை பிடித்தும், தோட்ட வேலை செய்தும் உணவைப் பெருக்கப்பாடுபடுகிறார்கள் என்கிற பொய்யான புரளியை ஜனங்கள் நம்பவேண்டுமென்று, எந்த சிவராமய்யரின் தினமணி, நேருகாட்டும் வழியை முதல் பக்கத்தில் போட்டிருக்கிறதோ, அதே தினமணியின் 6-வது பக்கத்தில், வெட்கமோ, தயக்கமோ இல்லாமல், விவசாயத்தில் விமானத்தின் பங்கு, விமானத்திலிருந்தே விதை விதைக்கப்படுகிறது என்று 2 தலைப்புகளில், அமெரிக்காவில், விவசாயத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் விமானங்களைப்பற்றிப் படம் போட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. மற்ற நாடுகளில் கருவிகள் செய்யும் வேலையை நம் நாட்டில் நம் சொந்தக் கவர்னர் ஜெனரல், முதல் மந்திரிகள் செய்கிறார்களே, இதென்ன கேலிக்கூத்து என்கிற கிண்டலைத்தான், படம் நாட்டு மக்களுக்குப் போதிக்குமே தவிர வேறென்ன? அதிகமான செலவு செய்து ஆட்களை வைத்து வேலை வாங்கி, "மற்றவர்களுக்குப் பிறந்த குழந்தைகளைத் தன் குழந்தைகள் என்று ஏற்கும் தசரதனையும்" தோற்கடித்து, தன் தோட்ட வேலையைப் பாரீர்! கலப்பை பிடிப்பதைக் காணீர்!! என்கிற பிரச்சாரம், இந்தக் காலத்திலும் 'செல்லுபடியாகுமா? இந்த வழிகள் உண்மையாகவே உணவைப் பெருக்க வழியாகுமா?

பதைக் குறிப்பிடவேண்டும்.

144அய் பிறப்பித்த மாஜிஸ்திரேட், இப்போது தாசில்தாராக உயர் பதவிபெற்று ஈரோடு மாற்றப்பட்டுவிட்டாராதலால் அவரை விசாரிப்பதற்காக என்று விசாரணையை 2-8-49-க்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

2-ந் தேதியோடு விசாரணை முடிந்துவிடுமென்றும், விசாரணைக்காக என்று பிறகு வாய்தா இருக்க மாட்டாதென்றும் நம்பகமாகத் தெரிகிறது.

வேலாயுதம் இறந்ததேன்?

வேலாயுதம் தூக்கு மரத்தில் தொங்கவிடப்பட்டார். அறிவியக்கப்பணி புரிந்ததைக் கண்டு அஞ்சிய அக்கிரமக்காரர்கள், ஒன்று கூடிச் சதியாலோசனை நடத்தி, கொலை செய்யக் கூலிக்கு ஆள் பிடித்து, அவரை வெட்டவெளியில், காலை சுமார் ஏழு மணிக்கு, கழுத்தை நெரித்துக் கொலை செய்து, தூக்கில் மாட்டி மரத்திலே தொங்கவிட்டு விட்டார்கள் மாபாதகர்கள். நினைத்தாலே நெஞ்சம் நடுங்குகிறது. இந்தக் கோர சம்பவத்தை எண்ணும் பொழுது கண்ணிலே நீர் தளும்புகிறது. அறிவியக்கப் பிரசாரத்தின் மூலம் பொதுவாழ்வில் ஈடுபடுவோருக்கு இதுதான் சமுதாயத்தின் பரிசா(?) என்று எண்ணும்பொழுது பயங்கரமாக இருக்கிறது. இந்தக் கோரசம்பவத்தைக் கேள்விப்பட்டபொழுது மனித உள்ளம் படைத்த அத்தனை பேருடைய இதயத்திலேயும் வேதனையும், சோகமும் கப்பிக்கொண்டிருக்கும். இந்தப் பயங்கரக் கோரத்தாக்குதலுக்கு ஆளானவர் ஓர் ஆரம்பப்பள்ளி ஆசிரியர். ஏழை, வேலாயுதம். இது நடந்தது உடையார்பாளையத்தில் 13-11-47ல். சற்றேறக்குறைய ஒண்ணேமுக்கால் ஆண்டுகளுக்கு முன்பு. அவர் செய்த குற்றம்: அவர் திராவிடர் கழகத்தவராக இருந்ததும்; பகுத்தறிவைப் பரப்பச் சந்தர்ப்பம் கிடைக்கும்பொழுது மேடையிலே பேசி வந்ததும் தான்.

* *

சற்றேறக்குறைய இரண்டாண்டுகளாக நம் உள்ளத்தை வாட்டி வதைத்து வந்த கொலை வழக்கின் விசாரணை முடிவடைந்து சென்ற 22-7-49ம் தேதி "தீர்ப்பு" வழங்கப்பட்டுவிட்டது. தமிழகத்தின் பத்திரிகை உலகத்தில் முக்கிய இடம் பெற்றிருந்த வழக்கு, நம்மிடையே பெரிய பரபரப்பையும், படிக்கும்பொழுது வேதனையையும் உண்டு பண்ணிக்கொண்டிருந்த வழக்கின் விசாரணைமுடிவடைந்து செஷன்ஸ் ஜட்ஜ் அவர்களால் தீர்ப்புக்கூறப்பட்டு விட்டது. இந்த வழக்கு மன்றமேற்றப்பட்டு விசாரணை நடத்தி, நீதி வழங்கப்பட வேண்டும் என்பதற்காக நாமும், நமது பத்திரிகைகளும் எடுத்துக்கொண்ட முயற்சி இவ்வளவு அவ்வளவென்று கூறமுடியாது. குறிப்பாக அரியலூர் தோழர் சபாபதி பிள்ளையும் (அகில இந்திய காங்கரஸ் கமிட்டி அங்கத்தினர்) பெரிதும் பாடுபட்டார். இவ்வளவு முயற்சியையும் ஒன்றுகூட்டிப்பார்த்தால், அவை இறந்துபோனசவத்திற்கு உயிரூட்டி, எழுந்து நடக்கும்படி செய்ய முயற்சித்து, அது வெற்றி பெற்றது போன்றதாகும். இவ்வளவும் எதற்காக, ஏன் நடைபெற்றது? நீதி நிலைநாட்டப்பட வேண்டும், நேர்மையும் நியாயமும் மனித வாழ்வில் இடம் பெற வேண்டும் என்பதற்காகத்தான்.

வழக்குமன்றமேற்றப்பட்டு விசாரிக்கப்படவேண்டும். வழக்கின் முடிவில் உண்மைக் குற்றவாளிகளுக்குச் சரியான தண்டனை வழங்கப்படவேண்டும். உண்மைக் குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள். உண்மை புலனாகும். நீதியும் நேர்மையும் நிலைநாட்டப்படும். உண்மைக்கு மதிப்பும் உயர்வும் உண்டு என்பது தெளிவாக்கப்படும். உண்மைக் குற்றவாளிகள் சரியானபடி தண்டிக்கப்பட்டு இனியும் நாட்டிலே இது போன்ற திடுக்கிடச்செய்யும் மிருகத்தனமான கோர நிகழ்ச்சிகள் நடைபெறா வண்ணம் தடுக்கப்பட்டு விடும் என்றெல்லாம் எண்ணினோம் — எதிர்பார்த்தோம் — முடிவிலே ஏமாந்தோம்.

குற்றவாளிகள் என்று சிலரைக் கூண்டிலே கொண்டு நிறுத்தியது சட்டம். கொலை செய்தவர்கள், கொலை செய்யத்தூண்டியவர்கள், இந்தபாதகச்செயலுக்கு உடந்தையாக இருந்தவர்கள் என்று முப்பிரிவுகளாகப்பிரித்து, அந்தச் சிலர் மீது குற்றம் சாட்டியது சட்டம். கொலை வழக்கின் விசாரணைக்குப்பிறகு மீண்டுமோர் சட்டம் அவர்கள் குற்றவாளிகள் அல்லவென்று கூறி விடுதலை செய்து விட்டது. அப்படியானால் வேலாயுதம் இறந்ததற்கு காரணம் என்ன? தற்கொலை என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? தற்பொழுது குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகள் அல்லவென்றால், இவர்கள் மீது போலீஸ் இலாகா சாட்டிய குற்றச்சாட்டுகள் அத்தனையும் பொய்தானா? உண்மைக் குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்படாமல் போய்விட்டார்களா? அப்படியானால் அவர்களைக் கண்டுபிடித்து தண்டிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையல்லவா? இந்த விதங்களில் எழுந்திருக்கும் கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் போலீஸ் இலாக்காவும், அரசாங்கமும் நியாயமான சமாதானம் தரட்டும்.

* *

"சட்டம் ஓர் இருட்டறை. அதில் வக்கீலின் வாதம் ஒளி தருகிறது" என்பது வேலைக்காரியில் நாம் கண்ட விளக்கம்.

"சட்டம் ஓர் குரைக்கும் நாய். திருட வருபவன் தித்திப்புப் பண்டம் போட்டால் தின்றுகொண்டு தலைகவிழ்ந்து கிடக்கும். அதேசமயம் தெருவிலே செல்லும் நல்ல மனிதரைக்கண்டு வீண் வம்புக்கும் குரைக்கும் நாயைப் போன்றது" என்று ஒரு நண்பர் சட்டத்தை நாய்க்கு உவமை காட்டினார்.

"சட்டம் ஓர் கழுதைக்கு ஒப்பானது. அது முன்னே சென்றால் கடிக்கவரும். பின்புறமிருந்தால் உதைக்கும். சில வேளைகளில் என்ன செய்வதென்று தெரியாமல் திகைக்க வைத்துவிடும்" என்று விளக்கம் தந்தார் வேறொரு தோழர்.

"இன்றைச் சட்டம் மனித உரிமைகளின் பாதுகாப்புக்காகவும், நன்மைகளுக்காகவும் ஏற்படுத்தப்பட்டதல்ல. வக்கீல்களின் வாதத் திறமையைக் காட்டவும், சிலரின் வயிற்றுப் பிழைப்புக்காகவும் ஏற்படுத்தப்பட்டிருப்பது" என்றார் பொருளாதாரத் திட்டம் தெரிந்த ஒருவர்.

நான் சட்டத்தை அவமதிக்க விரும்பவில்லை. அப்படிச் செய்தால் அந்தச் சட்டம் என்மீதும், இந்த கட்டுரையை வெளியிடும் பத்திரிகைமீதும் பாய்ந்துவிடும்— ஏற்கனவேயும் பாய்ந்திருக்கிறது என்பதும் தெரியும். சட்டம் உண்மையிலேயே எல்லோருக்கும் பயன் தருவதாகவும், நலம்

ரோஜா முத்தையா

விளைவிப்பதாகவும் இருக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை. சட்டம் சில வேளைகளில் குற்றமற்ற நிரபராதிகளைக் குற்றவாளிகளாக்கி, கூண்டிலே நிறுத்தி வைத்துத் தீர்ப்பு வழங்கி சிறையிலே தள்ளிவிடுகிறது. இப்படிச் சட்டத்தின் கோரப்பற்களிடையே அகப்படும் மனிதன் அப்பாவியாகவும், ஏழையாகவும் இருந்துவிட்டால் அவன்பாடு அதோகதிதான். ஆனால், சில சந்தர்ப்பங்களில் உண்மைக் குற்றவாளிகள் பணக்காரர்களாகவும், பதவியும் பாராளும் மன்றத்திலுள்ளவர்களிடத்தில் செல்வாக்குமுள்ளவர்களாகவும் இருந்து, பணத்தை அள்ளி வீசி வக்கீலின் வாதமெனும் ஒளியைச் சட்டமெனும் இருட்டறையில் புதைத்துவிடும்பொழுது, அது நிலைதடுமாறி அவர்களை நிரபராதிகள் என்றும் கூறிவிடுகிறது. இது போன்ற நிலை ஏற்படும்போது பொதுமக்களுக்குச் சட்டத்திடம் இருக்கும் மதிப்பும், பயமும் மறைந்துவிடுகிறது. மறைந்துபோன பயத்தையும், மதிப்பையும் மீண்டும் ஏற்படுத்துவதற்காகப் புதியதோர் அடக்குமுறை சட்டத்தை ஏற்படுத்தினால் முடியாது. இருக்கின்ற சட்டம் நீதி வழங்குவதாகவும், உண்மைக்கு மதிப்பளிப்பதாகவும் உள்ளபடி பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் என் விருப்பம்.

* *

வேலாயுதம் மரக் கிளையிலே பிணமாகத் தொங்கிக்கொண்டிருந்ததைத்தான் மக்கள் கண்டனர். கண்டதும் கண்ணீர் வடித்தனர். ஊரோரெல்லாம் ஓடிச்சென்று பார்த்தனர் அந்த மனதை உருக்கும் சம்பவத்தை. எங்கும் ஒரே பரபரப்பாகவும், இதுவேபேச்சாகவும் இருந்தது. பின் வழக்கப்படி நடைபெறும் போலீசாரின் விசாரணையும், பிரேத பரிசோதனையும் முடிந்து எல்லாம் ஒருவகையாக முடிந்துவிட்டது.

இதன்பின் போலீசார் புலன் விசாரணை நடத்திக்கொண்டிருந்த காலத்தில், சென்னை இரகசியப் போலீசாரின் தீவிரமான முயற்சிக்குப்பின் உண்மை ஒருவாறு கண்டுபிடிக்கப்பட்டது. வேலாயுதம் தற்கொலை செய்துகொள்ளவில்லை என்பதும், கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருப்பது போல துணிகரமாகச் செய்யப்பட்ட சதிவேலைதான் இந்தக் கொலைக்குக் காரணம் என்பதும்தான் இரகசியப் போலீசார் கண்டுபிடித்தது. இதன்பின் பலரைக் கைதுசெய்து 13பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்தக் குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருந்தவர்களுள் ஒருவர் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர், இன்னும் 2-பேர் பெரிய பணமூட்டைகள். மற்றும் சில பார்ப்பனர்களும் இருந்தனர். இவர்களில் பலர் புலன் விசாரணைக் காலத்திலும், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட காலத்திலும் தலைமறைவாக இருந்துவிட்டுப் பிறகு மாஜிஸ்திரேட்டிடம் வந்து ஆஜரானார்கள். இவைகளெல்லாம் கொலை நடந்து ஏழு மாதங்களுக்குப் பிறகு நடைபெற்றது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் அப்பொழுது ஜில்லா (திருச்சி) மாஜிஸ்திரேட்டாக இருந்தவர் வழக்கை வாபஸ்வாங்கிக்கொண்டுவிட்டார். இந்த விசயம்தான் அந்த வழக்கிலேயே முக்கியமான கட்டம்.

கொலை நடந்து ஏழு மாதம் வரை எந்தவித நடவடிக்கையுமின்றித் தாமதப்பட்டிருந்ததே மக்களிடையே பெரும் பரபரப்பாகவிருந்தது. ஏழு மாதங்களுக்குப்பின் வழக்கு பதிவுசெய்யப்பட்டுக் குற்றப் பத்திரிகை தாக்கலாகித் தலைமறைவாக இருந்த முக்கிய எதிரிகள் சரணடைந்த பின்பு, வழக்கு வாபஸ் வாங்கப்பட்டதானது மக்களிடம் பெரும் கொதிப்பையும், பலவிதச் சந்தேக எண்ணங்களையும் எழுப்பிவிட்டுவிட்டது. இந்த சந்தர்ப்பத்தில் வழக்கை ஆதரித்தும் நடத்தியே தீரவேண்டும் என்றும் காரசாரமான இரண்டு தலையங்கங்களை "தினசரி" எழுதியது. இதன்பின் மக்களிடையே ஏற்பட்டிருந்த கொதிப்பின் காரணத்தாலும், சிலருடைய முயற்சியினாலும் வேலாயுதம் கொலைவழக்கு சம்பந்தமான தஸ்தாவேஜிகளை சென்னை சர்க்கார் வரவழைத்து அது சம்பந்தமாகப் பரிசீலனை நடத்தியது. பிரஸ்தாப வழக்கு சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜிகளைப் பரிசீலனை செய்த பப்ளிக்பிராசிக்கூடர் எத்திராஜ் அவர்கள், வழக்கு நடத்துவதற்கு வேண்டிய ஆதாரங்கள் இருப்பதாக அபிப்பிராயப்படவே, வழக்கு நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இதன் பிறகு,

உடையார்பாளையத்தில் உதவி ஜில்லா மாஜிஸ்திரேட் தோழர் எல் தாயப்ப தேவர் முன்னிலையில் வேலாயுதம் கொலை வழக்கு ஆரம்பமாயிற்று. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. கொலை செய்யும் சதியில் பங்கெடுத்துக்கொண்ட அப்ரூவர் ரெங்கசாமி கொடுத்த வாக்குமூலங்களைப் படித்தபொழுது திடுக்கிட்டோம். பலத்த முன்னேற்பாட்டுடனும், பெரிய சதித் திட்டத்துடனும் கொலை நடத்தப்பட்டது என்பதை அப்ரூவரின் வாக்குமூலம் விளக்கமாக எடுத்துக் காட்டியது. அந்த நிகழ்ச்சிகளெல்லாம் பெரியகொள்ளைக்காரனின் கொலை ஏற்பாட்டைப்போல் இருந்தது. இதன் பிறகு மாஜிஸ்திரேட் அவர்களும், கொலை செய்யத்தூண்டியவர்கள், அதற்கு உடந்தையாக இருந்தவர்கள், கொலை செய்தவர்கள் என்கிற ரீதியில் 'குற்றவாளிகளின்மீது குற்றம் சாட்டித் தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்து வழக்கை செஷனுக்குக் கமிட் செய்தார்.

செஷன்ஸ் நீதிபதி பி. டி. ராமன் நாயர் அவர்கள் வழக்கை விசாரித்து "வேலாயுதம் கொலைக்கு எதிரிகள்தான் காரணம் என எண்ணவோ, சிறிதும் சந்தேகிக்கவோ கூட நான் சான்றுகாண முடியவில்லை" என்று கூறி 21-7-49 தேதி வழக்கை முடித்து எதிரிகளை விடுதலை செய்திருக்கிறார். செஷன்ஸ் நீதிபதி அவர்களுடைய தீர்ப்பில் குறைகூறவோ, அல்லது தவறு சொல்லவோ நாம் முன்வரவில்லை. ஆனால் இத்துடன் வேலாயுதத்தின் கொலை வழக்கு முடிந்து விட்டது என்று கருத முடியாது. இனிமேல்தான் அரசாங்கம் அதிக கவனத்தோடு இந்த வழக்கு விஷயத்தில் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

வேலாயுதம் தற்கொலை செய்துகொள்ளவில்லை என்பது உலகப் பிரசித்தமான உண்மை. அந்த பிரேத பரிசோதனையிலாவது தற்கொலை என்பதற்குப் போதுமான—உறுதியான—ஆதாரம்எதுவுமில்லை. அதுவுமின்றி அவர் தற்

கொலை செய்து கொள்ளவேண்டிய சூழ்நிலையிலும் இல்லை. பொதுவாழ்வில் ஈடுபட்டு, பகுத்தறிவுப் பாதையில் சென்று பணிபுரியும் யாரும் தற்கொலை செய்து கொள்ளவுமாட்டார்கள். அவர் கொலையுண்ட காலத்தில் குடும்ப வாழ்வில் அமைதியாகவே இருந்திருக்கிறார். சுற்றுச்சார்புகளும், சூழ்நிலையும் சுமுகமாகவே இருந்திருக்கின்றன. அவாது கடைசி நேரம் வரை பள்ளியில் இருந்து பணியாற்றியிருக்கிறார். இப்படிப்பட்டவர் தற்கொலை செய்து கொண்டார் என்று கூறுவதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை.

வேலாயுதம் கொலை செய்யப்பட்டார் என்பது மறுக்க முடியாத உண்மை. செஷன்ஸ் நீதிபதி அவர்களும் தம்முடைய தீர்ப்பில் வேலாயுதம் தற்கொலை செய்துகொண்டதாகக் குறிப்பிடவில்லை. எனவே வேலாயுதத்தைக் கொலை செய்த குற்றவாளிகள் யார்? அவர்கள் எங்கேயிருக்கிறார்கள்? அவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டாமா என்பதுதான் இப்பொழுது எழுந்திருக்கும் பிரச்னை. இது விசயத்தில் அரசாங்கம் கவனக்குறைவாக, பொறுப்புக் கழிந்துவிட்டதென்று இருந்துவிட முடியாது—கூடாது. இந்த வழக்கை மேல்கோர்ட்டில் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் உடனடியாகச் செய்ய வேண்டியது இன்றியமையாதது. இது விஷயமான ஒரு தெளிவான அறிக்கை அரசாங்கம் பொது மக்களுக்கு விடுக்கவேண்டும். மக்களுக்குச் சட்டத்தினிடம் நம்பிக்கையும், கௌரவமும் இருக்க வேண்டுமானால் வேலாயுதத்தைக் கொலைசெய்த மாபாதகனை—அல்லது மாபாதகர்களைக் கண்டு பிடித்து தண்டிக்க வேண்டியது பொறுப்புள்ள அரசாங்கத்தின் நீங்காத கடமை. நீதியின் பெயராலும், நேர்மையின் பேராலும், கேட்டுக்கொள்கிறேன், இந்த விஷயத்தில் காலதாமதம் செய்யாமல் ஒரு பரிகாரம் தேடவேண்டுமென்று.

பகுத்தறிவுப் பாதையில்சென்று புதியதோர் சமுதாயத்தை அமைக்கப் புரட்சிக் கருத்துகளை அள்ளி வீசும் நமக்கு; தூக்குக் கயிறுதான் சமுதாயம் தரும் பரிசு என்று முடிவு இருக்குமானால், தயங்காது வரவேற்போம் என்று உறுதியாக கூறுகிறேன்.

—புத்ததாசன்.

[2ம் பக்கத் தொடர்ச்சி]

நபர்களின் காரியங்களைக் கோவில்கள் அடக்கியாளமுடியாது. இனி வருங்காலத்தில் அதைப் பற்றிய உண்மையை நாம் நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். அது ஒரு பெரிய விஷயம். அதைப் பிறகு எடுத்துக்கொண்டு நன்றாக ஆராய வேண்டும்.

இனி மதத்தை எப்படித் திருத்தினாலும், அதை எப்படிக் கலைத்தமைத்தாலும், அதை ஒழிந்து போவதினின்றும் தடுக்கமுடியாது. அதன் கொள்கைகளில் ஒன்றாவது கண்டனத்திற்குட்படாமல் இருக்கமுடியாது. எல்லா மக்களையும் ஒப்புக்கொள்ளும்படி இனிச் செய்யமுடியாது.

சிலர் எல்லா மதக் கோட்பாடுகளையும் விட்டு ஒழுக்க அபிவிருத்திச் சங்கங்களைமட்டும் வைத்துக் கொள்ளலாமென்கிறார்கள். இது எப்படி ஒரு பெரிய மதமாகிவிடும் என்பதைப்பற்றிச் சுலபமாய்ப் பரீட்சித்துவிடலாம். சென்ற நூறு வருடங்களாக உலகில் பல இடங்களில், சிறப்பாக அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும்கூட மதாபிமான வைதீகச் சங்கங்களும் கோவில்களுமிருந்து வந்திருக்கின்றன. அவைகளில் அநேகம் மதக் கோட்பாடுகள் இல்லாமலே இருந்து வருகின்றன. சமீப காலத்திலிருந்து ஒழுக்காபிவிருத்திச் சங்கங்களும் இருந்துவருகின்றன. அவைகள் நீதி விஷயங்களின் சம்பந்தம் மட்டும் பெற்றிருக்கின்றன. மேலே கூறப்பட்டவைகளில் ஒன்றும் பொது மனிதர்களால் போற்றப்படுவதில்லை. கோவிலுக்குப் போகாத ஆறுகோடி அமெரிக்கர்களும், மூன்றுகோடி பிரிட்டிஷ்காரர்களும் அத்தகைய சபைகளின் கூட்டங்களுக்குப் போவதே கிடையாது. அப்படிப்பட்ட சபைகள் நூற்றுக்கும் குறைந்தேயிருக்கும். சபை ஒன்றில் சில நூறு அங்கத்தவர்கள்தான் இருப்பார்கள். அவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகவும் கிடையாது.

நம்முடைய காலத்திற்கு ஞாயிற்றுக்கிழமைக் கூட்டம் தேவையில்லை. அதற்குத் தெய்வவணக்கமோ அதற்குப் பதிலாக வேறு எதுவுமோ தேவையில்லை. மனிதன் இயற்கையிலேயே சாஸ்வதமான மதப்பற்றுள்ளவனல்லவா? மனிதனிடத்திலே நீங்காத மதப்பிரியம் உண்டு என்று அறிஞர்களான அநேக ஆசிரியர்கள் கூறவில்லையா? அதனால்தான் ஒரு மதம் மறைந்ததும் வேறு ஒன்று அதற்குப் பதிலாகக் கிளம்பிவிடுகிறது என்று அவ்வறிஞர்கள் கூறவில்லையா? இனி வருங்காலத்தில் எது மதமாயிருக்கக்கூடும்? இவ் விஷயங்களைப்பற்றி வேறு கட்டுரைகளில் பேசுவோம்.

நவீன நாகரீகத்தில் முன்னேற்றமடைந்திருக்கும் இடங்களின் நிலைமையென்ன? அங்குள்ள மக்களில் மூன்றில் இரண்டு பாகத்தவர் கோவிலுக்குப் போவதில்லை. அவர்கள் வீட்டில் கடவுளை வணங்குகின்றார்கள் என்றும் யாரும் சொல்ல முடியாது. இந்தத்தேசங்களில் லட்சக்கணக்கான குருக்கள் ஜனங்களைக் கோவிலுக்குப் போகும்படி நியாயம் சொல்லிக்கொண்டுதானிருக்கிறார்கள். மனைவிமார்களும் குமாரத்திகளும் தங்கள் தங்கள் ஆடவர்களை அதற்குக் கட்டாயப்படுத்தும்படி தூண்டப்படுகிறார்கள். கோவில் பூஜாமுறைகளைக் கூடிய வரையில்கவர்ச்சியுள்ளதாக்குகிறார்கள். குறிப்பிட்ட கிழமைகளின் நீண்ட பூஜா காலத்திற்குப் பதிலாக இனிமையான மாலைப் பூஜைகளைக் கிழமைதோறும் நடத்துகிறார்கள், சங்கீதம் அதிகமாகவும், பிரசங்கம் கொஞ்சமாகவும் உள்ள கூட்டங்களை நடத்துகிறார்கள். உற்சாகத்தை உண்டாக்கத்தக்க மத கற்பனைகளைப்பற்றிய தலையங்கங்களைப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துகிறார்கள். சமுதாய ஊக்கம் உண்டாகிறது. கோவில் சம்பந்தத்தோடு சமுதாய வாழ்வு அபிவிருத்தி செய்யப்படுகிறது. ஆடல் பாடல் ஆடம்பரக்காட்சிகள் நடத்தப்படுகின்றன. புதிய மதங்களான கிறிஸ்தவ விஞ்ஞானம், ஒழுக்க அபிவிருத்தி, தியாசபி, முதலியவை பழையவைகளோடு போட்டி போடுகின்றன.

முடிவு என்ன? உண்மை விஷ

யம் என்ன? நவீன நாகரீகத்தில் ஜனத்தொகையில் பாதியல்லது முக்கால் பாகம் இவைகளையெல்லாம் அசட்டை செய்து கோவிலுக்குப் போக மறுக்கிறது. மதக் கோட்பாடுகள் குறைந்ததற்கேற்ப குறைந்த ஜனங்களே போகிறார்கள். கோவிலுக்குப் போகும்படி ஜனங்களை நிர்ப்பந்தம் செய்யவில்லையென்று வைத்துக் கொள்ளுவோம். பத்து வருஷங்களுக்குக் குருக்கள்மார்கள் எல்லோரும் உலகத்தில் தங்கள் வேலையை நிறுத்திவிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். முடிவென்ன வாகும்? நீங்களே யதார்த்தமான பதில் கூறுங்கள். நான் என் அபிப்பிராயத்தை இங்கு வற்புறுத்த விரும்பவில்லை. ஆனால் அப்போது இன்னும் எத்தனை பேர் கோவிலுக்குப் போவதை நிறுத்தி விடுவார்களோ என்பதை நினைக்க ஆச்சரியமாயிருக்கின்றது.

மனிதனுக்கு இயற்கையிலேயே மதப்பற்றுக் கிடையாதென்பது வெளிப்படை. நாகரீக மக்களின் தொகையில் பாதிக்கும் குறைந்தவர்களை மதப்பற்றுள்ளவர்களாக வைத்துக்கொள்ள பத்து லட்சம் பாதிரிகளின் மிகுந்த முயற்சி தேவையாக இருக்கிறது.

இயற்கை மதப்பற்றைப்பற்றிப் பேசும் ஆசிரியர்கள் ஒரு தவறு செய்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பழைய காலத்தையே கவனிக்கிறார்கள், தற்காலத்தைப் பற்றி அறியாதிருக்கிறார்கள். முன் காலத்தில் ஒரு மதம் போனால் வேறு மதம் உண்டாயிற்று. ஆசியாவில் இருந்தது போல படித்தவர்கள் பல நூற்றாண்டுகளாக மதம் ஒன்றும் இல்லாமலே இருந்து வந்தார்கள். எப்படியிருந்தாலும் நமது காலம் ஒரு புதிய காலமேயாகும். உலக சந்தர்ப்பங்கள் முழுவதும் மாறி விட்டன. இருபதாவது நூற்றாண்டில் என்ன நேரிடுமென்று யாரும் கூறமுடியாது. மதத்தைப்போற்ற நமது தலைமுறையில் அரசியல் நிர்ப்பந்தத்தையும் உண்டாக்க முடியாது. சென்ற பதினைந்து நூற்றாண்டுகளாக அப்படித்தான் நடந்து வருகிறது. மதப்பற்று மனிதனுக்கு இயற்கையல்லவென்பதைக் கண்டு பிடித்தோம். அநேகர் மதத்தை விட்டு விட்டார்கள். மதப் புத்தகத்தை யாரும் படிப்பதில்லை. நமது மதப் புஸ்தகங்களிலும் பத்திரிகைகளிலும் மதக்குறிப்புகள் காணப்படுவதில்லை. மேடைகளில் மதங்கள் கேவலமாய்ப் பேசப்படுகின்றன. அதைக்கேட்டு வேடிக்கை பார்ப்பவர்கள் நகைக்கிறார்கள். ஆடும் படக்காட்சிகளில் மதத்தை ஒப்புக்குச் சேர்த்திருக்கிறார்கள். அது கண்டு ஜனங்கள் புன்சிரிப்புக் கொள்ளுகிறார்கள். மதம் மெதுவாக இறந்து கொண்டிருக்கிறது.

அதனால் வாழ்வும் மனமும் கெட்டுப்போகுமா? மதத்தை அலட்சியம் செய்த எண்பது லட்சம் லண்டன் வாசிகளுடைய மனமும் வாழ்வும் கெட்டுப் போகவில்லை. இவர்களைப்பற்றி நான் நன்கு அறிந்திருக்கிறேன். இவர்களுக்கு மதம் கிடையாது. இவர்கள் மதத்தைப்பற்றியும் நினைப்பதில்லை. கெட்டுப்போகுமென்பதும், அவநம்பிக்கையால் அபாயமென்பதும் சாதுர்யமான கட்டுக்கதைகளேயாகும். வாழ்வு நல்லது. அது ருசிகாமானது. லட்லாதி லட்சம் பேர் அனுபவித்தானந்திக்க முடியும். பக்தி மிகுந்த முற்காலத்தில் அவர்கள் அடைபட்டுக் கிடந்தார்கள். மக்களின் விருப்பத்திற்கேற்ப கலைகளிருக்கின்றன. அறிஞர்களுக்கு விஞ்ஞானம் இருக்கிறது; இலக்கியம் இருக்கிறது, பெருமை மிக்க தேசமும் கடலும் இருக்கின்றன. நகரத்தில் 1001 வேடிக்கை விநோதங்கள் இருக்கின்றன. மக்கள் வாழ்வு வேகமாய் மாறுதலடைந்து வருகிறது. சரித்திரத்தில் புதிய அத்தியாயம் ஆரம்பமாகிறது. ஆகவே மதமின்றி மக்கள் வாழமுடியாது என்று மதப்பிரசாரகர்கள் பயப்படவேண்டியதில்லை.

மன்னர்களுக்கென்ன நட்டம்?

சமஸ்தானங்களை யெல்லாம் ஒன்றாக்கி, சிதறுண்டு கிடந்ததை சிறப்பாக ஒட்டவைத்து விட்டார், பிரம்மதேவனாகிய பட்டேல் பிரபு அவர்கள் என்று பேசிக் கொள்கிறார்கள். ஒட்ட வைத்தது சரியா? ஒட்டினதால் ஒன்றாக இயங்கும் இயற்கை அவைகளுக்குண்டா? இந்த ஒட்டுமானம் எவ்வளவு காலத்திற்குச் செல்லுபடியாகும்? இவைகளுக்கு எதிர்காலம் பதில் கூறும். ஆனால் இந்த ஒட்டு வேலையினால் மக்களுக்கு என்ன நன்மை? மன்னர்களுக்கென்ன நட்டம்? சமஸ்தானாதிபதிகளுக்கு இப்போது என்னென்ன உரிமைப் பொருளாக இருந்துவந்ததோ அதாவது அரண்மனை, வாகனங்கள், மற்ற சொந்த சொத்துக்கள் எல்லாம் அவரவர்களுக்கே சொந்தம். அதுபோக, ரொக்கமாக வருடமொன்றுக்கு கொடுத்துவருவது எவ்வளவு என்று உங்களுக்குத் தெரியுமா?

திருவாங்கூர் மன்னருக்கு		18லட்சம்
ஜட்பூர்	,,	17½ ,,
பிக்கானீர்	,,	17 ,,
ஜயப்பூர்	,,	10 ,,
மீவார்	,,	10 ,,

வெளிவந்து விட்டது!
வெளிவந்து விட்டது!!
பலர் நெடுநாளாய் ஆவலுடன்
கேட்டுக் கொண்டிருக்கும்
இராமாயண ஆராய்ச்சி
பாலகாண்டம்
132 பக்கம் ● எட்டு அணா.
பிரகிருதிவாதம்
அல்லது
மெட்டிரீயலிஸம்
76 பக்கம் ● அய்ந்தணா.
ஞான சூரியன்
192 பக்கம் ● எட்டு அணா.
தேவைக்கு உடனே எழுதுங்கள்
வியாபாரிகளுக்கு கழிவு உண்டு.
★
—: கிடைக்குமிடம் :—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர்
என். கரிவரதசாமி. தமிழன் அச்சகம்.
59. கச்சேரி வீதி, ஈரோடு.